பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 09 வெள்ளிக்கிழமை 22.03.2024 கதிர் 136

# வெடுக்குநாறிமலையினில் கோயில் எதுவும் இல்லை

## அது பௌத்த மரபுரிமைப் பகுதி என்கிறார் அமைச்சர் டிரான்

வெடுக்குநாறி மலையில் எந்த கோயில்களும் இல்லை. அங்கு அநுராதபுர யுகத்துக்கு சொந்தமான தொல்பொருள் மரபுரிமைகள் உள்ளதாக தொல்பொருள் திணைக்களம் அடையாளப்படுத்தியுள்ளது. பௌத்தமதமரபுரிமைகள்உள்ள பகுதியில் பிறிதொரு தரப்பினர் தமதுமதவழிபாடுகளைமுன்னெடுக்கும் போது முரண்பாடுகளே தோற்றம் பெறும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றசபாநாயகருக்கு ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ள நிலையில் நேற்றுஐக்கியதேசியக்கட்சிக்குயாழ். மாவட்டத்தில் புதிய அமைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அருண் சித்தார்த் என்பவரே அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார். இங்குள்ள தனியார் விடுதி ஒன்றில் இது தொடர்பான நிகழ்வு இடம்பெற்றது. கட்சியின்பிரதித்தலைவர்களில் ஒருவரும் முன்னாள் நிதி அமைச்சருமானரவிகருணாநாயக்க இந்த நிகழ்வை நடத்திவைத்தார். அருண் சித்தார்த்தை மாவட்ட அமைப்பாளராக அந்தக் கூட்டத்தில் அவர்கைகளைஉயர்த்திஅறிவித்தார்.

நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ☞ 2

## சபாநாயகருக்கு எதிரான பிரேரணை தோற்கடிப்பு

### 42 வாக்குகளால் ஆளும் தரப்புக்கு வெற்றி

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் எதிர்கட்சிகளினால்சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக கொண்டுவரப்பட்டநம்பிக்கையில்லாப் பிரேரணை42மேலதிகவாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக 75 ☞ 9

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்ற செய்தியோடு யாழ். வாருங்கள்

### ஜனாதிபதியிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை

'தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை' எனும் செய்தியுடன் ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தர வேண்டும் என குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்முருகையா கோமகன்கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு இன்றுவெள்ளிக்கிழமை ரணில் விக்கிரமசிங்க வருகை தரவுள்ள நிலையில், நேற்றுயாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச்சந்தித்துஇந்தக் கோரிக்கைவிடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ள ஜனாதிபதி யாழில். கடந்த33வருடகாலமாக இராணுவ கட்டுப்பாட்டில் இருந்தசுமார்278ஏக்கர் காணிகளை அதன் உரிமையாளர்களிடம் மீளகையளிக்கவுள்ளார்.

இதனை நாம் வரவேற்கிறோம்.

தமிழர் பிரச்சினைகளில் அவசரமாகவும், அவசியமாகவும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளாக, காணி விடுவிப்பு, தமிழ் அரசியல் கைதிகளின் ☞ 9

## வெடுக்குநாறிமலையில் பௌத்த தூபி இடித்தழித்தே லிங்கம் வைக்கப்பட்டது

### நாடாளுமன்றில் விசம் கக்கிய சரத் வீரசேகர

வெடுக்குநாறிமலையில் இருந்த பழமையான பௌத்த தூபி இடித்தழிக்கப்பட்டு அதன் மீது சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைமீதானமூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன 1987 ஆம் ☞ 8

## அன்று நல்லவர்: ஆனால் இன்று நேர்மை தவறினார்

### சபாநாயகர் குறித்து விமல் விமர்சனம்

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன கடந்த காலங்களில் இலங்கையின்ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க செயலாற்றினார்எனினும் தற்போது அவரது செயற்பாடுகள்ஆளும்தரப்பின் கட்டளைக்கு அமையச் செயற்படுகின்றார் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமானவிமல் வீரவன்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைமீதானமூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன 1987 ஆம் ஆண்டு 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக தற்றுணிவுடன் வாக்களித்து ☞ 2

## திரவ பால் உற்பத்தியை கூட்ட மேலும் 3 தொழிற்சாலைகள்

பிரான்ஸ் நாட்டின் உதவியுடன் திரவ பால் உற்பத்தியை அதிகரிக்க 6தொழிற்சாலைகளைத் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதில்இதுவரை 3 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளனஎன்று கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.பி ஹேரத் தெரிவித்தார்.

விவசாயி மற்றும் நுகர்வோர் ஆகிய இருவரையும் பாதுகாக்கும் முறைமையின் ஊடாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாய அமைச்சின் ஊடாக நெல் கொள்வனவு செய்வதற்கான சூழல் தற்போது தயாராகியுள்ளது. நுகர்வோரையும் ☞ 2

### 2ஆம் கட்ட மீளாய்வுப் பேச்சைத் தொடர்ந்து

## பொருளாதாரக் கொள்கைகள் குறித்து நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு

சர்வதேச நாணய நிதியத்தின் 2 ஆவது மீளாய்வுக் கூட்டத்தை நிறைவு செய்யும் வகையில்,ஆளும்தரப்புக்கும்நாணயநிதியத்திற்கும் இடையிலான பேச்சுக்களில் பொருளாதார கொள்கைகள் தொடர்பிலான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதென சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தூதுக்குழுபிரதானிபீட்டர் புரூவர் தெரிவித்தார்.

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரம் கிடைத்தவுடன் இலங்கைக்கு 337 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். ☞ 2

## எந்த தேர்தல் வந்தாலும் இலங்கையில் பொருளாதார சீர்திருத்தம் தடைப்படாது

எந்தத் தேர்தல் நடத்துவதற்கு அறிவிக்கப்பட்டாலும் சர்வதேச நாணய நிதியத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார சீர்திருத்தம் தொடர்பான வேலைத்திட்டத்தில் எவ்விதமான பின்னடைவும் ஏற்படாது என நிதிஇராஜாங்கஅமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

தற்போது நடைமுறையிலுள்ள சீர்திருத்தத்தினை நாட்டின் சட்டமாக்குவதற்கு ஆளும் தரப்புத் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தில் இந்தியா, இலங்கை,பங்களாதேஷ் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளுக்குப் பொறுப்பான நிறைவேற்றுப் பணிப்பாளர்பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியத்துடன் இடம்பெற்ற ☞ 9

## சுமந்திரன் மீண்டும் வழக்கு

நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை சட்டமாக்கும் போது, சபாநாயகர் செயற்பட்ட விதத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்தஅடிப்படை உரிமை மனுவை புதிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

சபாநாயகருக்கு எதிராக அவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவைவிசாரணைக்கு ஏற்கமுடியாது என்று பெப்ரவரி 29 உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டசட்டத்திற்கு எதிராக இலங்கையில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்று சட்ட மா அதிபர் நீதிமன்றத்தில் ஆஜராகி முன்வைத்த அடிப்படை ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்டு இந்த தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

நிகழ்நிலை காப்பு சட்டம்நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள் ☞ 8

## பல்கலைக்கழக கல்லூரி விவகாரம் சபையில் நேற்றுக் கேள்வி, பதில்

பல்கலைக்கழகக் கல்லூரிகளில் கற்கும் மாணவர்களுக்குப்பட்டம் வழங்குவது தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று ஆராயப்பட்டது. இதுதொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதிலளித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசஎழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சஜித் பிரேமதாச தெரிவித்ததாவது:

பல்கலைக்கழக கல்லூரி மாணவர்களின் உயர் தேசிய பட்டச் சான்றிதழ், (NVQ) 6 சான்றிதழ்கள் 2015, 2016மற்றும்2017ஆகிய 3 தொகுதியினருக்கும் வழங்கப்படும் என்று விளம்பரப்படுத்தப்பட்டாலும், உயர் தேசிய பட்டச் சான்றிதழுக்குப் பதிலாக சாதாரண சான்றிதழை மாத்திரம் வழங்கும் வகையில் புதிய நடவடிக்கை ☞ 9

## இந்துக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

இலங்கையில் இந்துக்கள் மற்றும் ஏனைய சிறுபான்மையின சமூகங்களின் உரிமைகளை பாதுகாக்குமாறுமனிதஉரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

வவுனியா - வெடுக்குநாறிமலைஆதி சிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி தின பூஜை வழிபாடுகளின் போது சிலர் கைது செய்யப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இந்துக்களின் வழிபாட்டுத்தலங்களில் தலையீடு செய்வதை உடன் முடிவுக்கு ☞ 2

## இனி இது .....

விஜயகலா மகேஸ்வரனோ கடசியின் ஏனைய உறுப்பினர்கள் எவருமோ கலந்துகொள்ளவில்லை. அருண் சித்தார்த்தின் வழக்கமான பெண்கள், குழந்தைகள், முதியோர் படையணியினர் அரங்கின் இருக்கைகளை நிரப்பி இருந்தனர்.

ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் எதிர்கொள்ளவுள்ள நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்திருக்கக்கூடிய மிக மோசமான அரசியல் காய்நகர்த்தலாக இது இருக்கப்போகிறது. யானை தன் தலையில்தானே மண்ணை அள்ளிப் போடுவதைப் போன்று ஐ.தே.கவும் தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுள்ளது. ஜனாதிபதிக்கு வடக்கில் கிடைக்கக்கூடிய கொங்ச நஞ்ச வாக்களையும்கூட இல்லாமலாக்கி இருக்கிறது.

அருண் சித்தார்த் கடந்த காலங்களில் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான முரட்டுத்தனமான வாலிபராகத் தன்னை அடையாளம் காட்டிக்கொண்டவர். சாதி ரீதியான அரசியலைக் கையில் எடுப்பதற்கு அவர் எடுத்து வந்த -முயற்சிகள் இதுவரையில் வெற்றியளிக்கவில்லை. வடக்கு கிழக்கில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்த, அவர்களுக்காக கோயில் நுழைவுப் போராட்டம் உள்ளிட்ட பல போராட்டங்களை முன்னெடுத்த தலைவர்களும் கட்சிகளும் உள்ளன. அந்தத் தலைவர்களும் கட்சிகளும் உண்மையிலேயே ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர்கள்.

அருண் சித்தார்த் தனது சொந்த பந்தங்கள், ஊரவர்கள் உள்ளிட்ட ஒரு சிறு தொகையினரைக் கூடவைத்துக்கொண்டு சாதிய அரசியலை முன்னெடுக்கத் துடிப்பவர். சாதி அரசியல் மூலம் தனது தனிப்பட்ட வாழ்க்கையை வளப்படுத்த -முயற்சிப்பவர். எல்லாவற்றுக்கும் மேலாகத் தானே ஆவா குழுவின் தலைவன் என்று தெற்கில் பல சிங்கள ஊடகங்களுக்குப் பேட்டி கொடுத்தவர். கடந்த காலங்களில் தமிழ்த் தேசியத்திற்கும் புலிகளுக்கும் எதிராக இவரை யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ள சில தரப்புக்கள் நன்கு பயன்படுத்திக்கொண்டன. அவற்றின் ஒத்துழைப்போ-டு அவர் தன்னை பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு நெருக்கமானவராகத் தெற்கில் அறிமுகப்படுத்திக்கொண்டார்.

அதன் விளைவாக, கள யதார்த்தத்தை நன்கு விளங்கிக்கொள்ளாமலேயே ரவி கருணாநாயக்க அவரது வலையில் வீழ்ந்துள்ளார் போன்றே தோன்றுகின்றது. அதனாலேயே அவர் அருண் சித்தார்த்தை விஜயகலாவின் ஆட்சேபனையை மீறியும் கட்சியின் மாவட்ட அமைப்பாளராக்கியுள்ளார். அருணை வைத்து யாழ்ப்பாணத்தில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதரவைப் பெற்றுவிட முடியும் என்று ரவி கணக்குப் போட்டி-ருக்கக்கூடும். ஆனால், கள யதார்த்தத்தை நன்கு அறிந்து வைத்திருக்கக்கூடிய விஜயகலாவும் ஏனையவர்களும் அதிலிருந்து விலகியே இருக்கின்றனர். இது அவலை நினைத்துக்கொண்டு வெறும் உரலை இடிக்கும் கதை என்பது அவர்களுக்குத் தெரியும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வெடுக்குநாறிமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நிகழ்நிலை காப்புச் சட்ட வரைபு 2016 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. நிகழ்நிலைகளில் இடம்பெறும் வன்முறை மற்றும் மோசடிகளை கருத்திற் கொண்டு இச்சட்டம் விரைவாக இயற்றப்பட்டது.

உயர் நீதிமன்றத்தின் திருத்தங்களுடன் இந்த சட்டம் இயற்றப்பட்டுள்ளதை சட்டமா அதிபர் உறுதிப்படுத்தியுள்ளார். இதன் பின்னரும் ஏன் இந்த சட்டத்தை எதிர்க்கிறார்கள் என்பதை அறியமுடியவில்லை.

பதில் பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோனை நியமிக்குமாறு ஜனாதிபதி பரிந்துரைத்த போது அரசமைப்பு பேரவையின் 5 உறுப்பினர்களும் ஆதரவு வழங்கினார்கள்.

பதில் பொலிஸ்மா அதிபரின் தலைமையில் 'யுக்திய' நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோது ஒரு தரப்பினர் அதற்கு எதிராக நீதிமன்றம் சென்றார்கள்.

அரசமைப்பின் பிரகாரம் பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டுள்ளார். அரசமைப்பு பேரவையின் இரு உறுப்பினர்கள் பொலிஸ்மா அதிபர் நியமனம் மீதான வாக்கெடுப்புக்கு கோரப்பட்ட வாக்களிப்பை புறக்கணித்தமை அரசியல் சூழ்ச்சி என்றே கருதுகிறேன். இந்த விவாதத்தில் வெடுக்கு நாறிமலை பற்றி பேசப்பட்டது. கோயிலுக்கு சென்றவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

வெடுக்குநாறி மலையில் எந்த கோயில்களும் இல்லை என்பதை தெளிவாக குறிப்பிடுகிறேன். இந்த மலையை தொல்பொருள் திணைக்களம் அநுராதபுர யுகத்துக்கு சொந்தமான தொல்பொருள் மரபுரிமைகள் உள்ள பகுதியாக அடையாளப்படுத்தியுள்ளது.

பௌத்த மத மரபுரிமைகள் உள்ள பகுதியில் பிறிதொரு தரப்பினர் தமது மத வழிபாடுகளை முன்னெடுக்கும் போது முரண்பாடுகளே தோற்றம் பெறும்.

2023 ஆம் ஆண்டு இந்த மலையில் சட்டவிரோதமான முறையில் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்ததும் பிரச்சினைகள் தோற்றம் பெற்றன. மார்ச் 4 மதிமுகராசா என்ற பூசகர் வெடுக்குநாறி மலையில் பூஜை வழிபாட்டில் ஈடுபட வவுனியா நீதவான் நீதிமன்றில் அனுமதி கோரியுள்ளார்.

இந்த கோரிக்கையை நீதிமன்றம் மறுத்துள்ள நிலையில் மார்ச் 8 சிவராத்திரி தினத்தன்று 400 பேர் வரை இந்த மலைக்கு சென்றுள்ளார்கள். மாலை 6 மணி வரை மலையில் இருக்க முடியும், 6 மணிக்கு பின்னர் அங்கு எவரும் இருக்க முடியாது என்று குறிப்பிட்டிருந்த நிலையில் சுமார் 40 பேர் இரவு 8 மணிவரை அங்கு இருந்துள்ளார்கள்.

வெடுக்குநாறி மாலையில் இரவு 8 மணிவரை தங்கியிருந்தவர்கள் அடுப்பு பற்ற வைத்து சட்டவிரோதமான முறையில் செயற்பட முற்படுகையில் தொல்பொருள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் இச்செயற்பாட்டை தடுத்து நிறுத்துமாறு பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன் பின்னரே 8 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

பௌத்த மரபுரிமைகள் உள்ள இடங்களுக்கு சென்று முறையற்ற வகையில் செயற்பட்டால் பிரச்சினைகளே தீவிரமடையும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

சட்டவிரோதமான முறையில் எவர் செயற்பட்டாலும் கைதுகள் இடம்பெறும். இந்து கோயில்களுக்கு சென்று பிற மதத்தவர்கள் முறையற்ற வகையில் செயற்பட்டால் அவர்களையும் நாங்கள் கைது செய்வோம்.

ஆகவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாண வாக்குகளை எதிர்பார்த்து ஒருதலைபட்சமாக கருத்து தெரிவிப்பதை எதிர்க்கட்சியினர் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்றார்.

## திரவ பால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தியாளரையும் பாதுகாத்து முன்னோக்கிச் செல்ல ஒரு முறைமை தயாராகி வருகிறது. அண்மைக் காலமாக காய்கறிகள், பழங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளன. விவசாய அமைச்சு என்ற வகையில், காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன்படி, சந்தையில் காய்கறிகள் மற்றும் பழங்களின் விலையை பழைய நிலைக்கு கொண்டுவர முடிந்தது.

அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி பயிர் சேதத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், மக்களின் புரதத் தேவைக்காக இறைச்சி மற்றும் முட்டைகளை உற்பத்தி செய்து நாட்டை தன்னிறைவு அடையச்செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தை விவசாய அமைச்சு நடைமுறைப் படுத்தியுள்ளது. கால்நடை உற்பத்தியை அதிகரிக்க சுகாதார திணைக்களம் மற்றும் 9 மாகாண சபைகள் இணைந்து கால்நடை வளர்ப்பின் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

மேலும், பிரான்ஸ் நாட்டின் உதவியுடன் திரவ பால் உற்பத்தியை அதிகரிக்க 6 தொழிற்சாலைகளைத் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதில் இதுவரை 3 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. வீழ்ச்சியடைந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்றார். அந்த நாடு இன்று மக்கள் வாழக்கூடியதாக மாற்றப்பட்டுள்ளது.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் அத்தியாவசியப் பொருட்களைத் தட்டுப்பாடு இன்றி நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளும் சூழலை உருவாக்க ஆளும் தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் விவசாயக் கொள்கை மூலம் நுகர்வுக்கு தேவையான அரிசியை உற்பத்திசெய்யக்கூடியதாக உள்ளது.

இதன்படி அடுத்த மாதம் 6 ஆம் திகதி தேசிய புத்தரிசி விழாவை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஸ்ரீ மஹா போதி முன்னிலையில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன' என்று. கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.பி ஹேரத் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதியால் வங்குரோத்து நாட்டையும் வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்பட்ட நாட்டையும் மீட்டெடுக்க முடிந்தது. மக்களை வாழ வைக்கும் சவாலையும், எதிர்காலத்திற்கு ஏற்ற இளம் தலைமுறையை உருவாக்கும் பொறுப்பையும் அரசாங்கம் வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது.

மேலும், தற்போது முதியோர்களை பராமரித்தல், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குதல் போன்ற விடயங்களுக்காக 'அஸ்வெசும' உள்ளிட்ட நலன்புரித் திட்டங்களை ஆளும் தரப்பு செயல்படுத்திவருகிறது என்றார்.

## அன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க தனது ஒத்துழைப்பை வழங்கினார்.

அதேபோல் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய ஜனாதிபதி பதவி விலகியதன் பின்னர் அமெரிக்க தூதுவர் இடைக்கால ஜனாதிபதியாக பதவியேற்குமாறு சபாநாயகருக்கு ஆலோசனை வழங்கினார். அரசமைப்புக்கு முரணான இந்த ஆலோசனையை சபாநாயகர் புறக்கணித்தார். ஆகவே சபாநாயகரின் இவ்விரு செயற்பாடுகளையும் மதிக்க வேண்டும்.

நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை கொண்டே நாட்டு மக்கள் உயர்நீதிமன்றத்தை நாடுகிறார்கள். சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கும் வியாக்கியானத்தை முழுமையாக செயற்படுத்த வேண்டிய பொறுப்பு சபாநாயகருக்கு உண்டு. இதற்கு சபாநாயகர் நடுநிலையாக செயற்பட வேண்டும்.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய திருத்தங்கள் குழுநிலையின் போது சட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. குறைகளை சுட்டிக்காட்டியும் சபாநாயகர் அதனை கருத்திற் கொள்ளவில்லை. இதன் விளைவையே அவர் இன்று எதிர்கொள்கிறார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா ஒரு காலத்தில் கௌரவமாக செயற்பட்டிருந்தாலும் தற்போது அவர் ஆளும் தரப்பின் கட்டளைகளுக்கு அமைய செயற்படுகிறார். நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்படலாம், ஆனால், அவர் தார்மீகமான முறையில் தோல்வியடைந்துள்ளார். ஆகவே அவரது பக்கச்சார்பான செயற்பாடுகளுக்கு அதிருப்தியை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

# நிறைவேற்று அதிகாரத் தரப்பின் எடுபிடியாக செயற்பட்ட சபாநாயகர்

## கஜேந்திரன் எம்.பி. சபையில் விளாசல்

நிறைவேற்று அதிகாரத் தரப்பின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு எடு பிடியாக, ஓர் அடிமையாக சபாநாயகர் செயற்பட்டிருந்தார் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் வடமராட்சி கிழக்கில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்காக சென்றிருந்தபோது பொலிஸார் அவரை கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அதுதொடர்பில் ஏற்பட்ட தகராறில் பொலிஸாரின் குற்றங்களை மறைப்பதற்காக பொலிஸுக்கு பொறுப்பான அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் திணைக்களம் கூட்டிணைந்து எமது தலைவர் குற்றமிழைத்தது போன்று பொய்க்குற்றச்சாட்டை சுமத்தி அவர் கொழும்பில் உள்ள தனது இல்லத்திலிருந்து நாடாளுமன்றம் வரத்தயாராகிக் கொண்டிருந்தபோது அவரை கைது செய்ய பொலிஸாரை கிளிநொச்சியிலிருந்து அனுப்பியிருந்தனர்.

இவ்வாறான நிலையில் சபாநாயகருடன் தொடர்புகொண்டு நாடாளுமன்றம் வந்து தன்னுடைய கருத்துக்களை பதிவு செய்த பின்னர் தன்னை விசாரணைக்கு அழைத்து செல்ல நீங்கள் பொலிஸாருக்கு அறிவுறுத்த வேண்டும் என எமது தலைவர் வலியுறுத்தினார். ஆனால் சபாநாயகர் என்ற தனது அந்தஸ்தை மறந்து தனது பொறுப்பை மறந்து நிறைவேற்று அதிகார தரப்பின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு எடு பிடியாக, ஒரு அடிமையாக சபாநாயகர் செயற்பட்டிருந்தார்.

இதனால் நீதிக்குப் புறம்பான முறையில் எமது தலைவர் கைது செய்யப்பட்டு அவரது சிறப்புரிமை மீறப்பட்டது. இதற்கான நீதி இன்னும் எமது தலைவருக்கு கிடைக்கவில்லை.

இவ்வாறு பல சம்பவங்கள் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்றபோது ஆளும் கட்சியும் கவலைப்படவில்லை. எதிர்க்கட்சியும் கவலைப்படவில்லை.

தமிழர்கள் என்று வருகின்றபோது இந்த சபையில் இருக்கக்கூடிய ஆளும் தரப்பினரும் எதிர்த்தரப்பினரும் இணைந்தே செயற்பட்டுள்ளனர். சபாநாயகருக்கு பதவி தேவை அதற்காக நிறைவேற்று அதிகாரத்தில் இருப்பவர்களின் கால்களைப் பிடித்துக்கொண்டு இருக்கவேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி, ராஜபக்சவுடன் உள்ள கொள்ளைக்கும்பலைப் பாதுகாக்கும் பணியைச் செய்வதனால் அந்தப் பணியைச் செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வேண்டப்படுகின்ற அனைத்துச் செயற்பாடுகளையும் செய்துகொடுக்க வேண்டிய கடப்பாடு உள்ளவராக சபாநாயகர் மாறியுள்ளார்.

அதன் காரணமாக அவர் ஜனாதிபதிக்கு வேண்டியவாறு நாட்டின் சட்டங்களை வளைத்துப் போடுகின்ற அனைத்து சமூக விரோத, ஜனநாயக விரோத அனைத்து நடவடிக்கைகளுக்கும் சபாநாயகர் ஆதரவாக இருந்து சபையை தவறாக வழிநடத்துகின்றார். அவர் பதவி வெறி பிடித்தவராக செயற்பட்டார்.

கடந்த காலங்களில் இவ்வாறு தமிழர்களுக்கு எதிராக முடிவுகளை எடுக்கிற பொது இங்குள்ள எல்லோருக்கும் அது மகிழ்ச்சியாக இருந்தது. நாடாளுமன்றம் தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறை சட்டங்களை இயற்றுகின்றபோது இங்குள்ள பேரினவாதிகளும் சிங்கள மக்களும் அவற்றுக்கு ஆதரவு தெரிவித்து கரகோஷம் எழுப்பினார்கள்.

இன்று இந்த நாட்டிலுள்ள 2 கோடி மக்களினதும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தை நசுக்கும் நிகழ்நிலை காப்பு சட்டத்தை உயர் நீதிமன்றத்தின் விதப்புரைகளையும் மீறி சட்ட விரோதமாக நிறைவேற்ற துணிந்த இந்த சபாநாயகர் இந்தச் சபையின் காவலரா? என்பதை மக்கள் பிரதிநிதிகள் தீர்மானிக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வாதிகார ஆட்சியை முன் கொண்டு செல்ல பொலிஸார் மக்கள் மீது காட்டாட்சியை நடத்த அவர்களுக்கு கடுமையான சட்டங்கள் தேவைப்படுகின்றன.

இவற்றை சட்டத்துக்கு முரணாக நிறைவேற்றிக்கொடுக்கும் சபாநாயகர் இந்த நாட்டின் ஒரு சாபக்கேடு. தனது வெட்கம் கெட்ட வேலைக்காக அவர் சபாநாயகர் பதவியிலிருந்து மட்டுமல்ல பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் இராஜினாமா வேண்டும் என்றார்.

## பொருளாதாரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தின் இரண்டாவது மீளாய்வு நிறைவடைந்ததன் பின்னர் இலங்கை மத்திய வங்கியில் நேற்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தூதுக் குழுவினால் நடத்தப்பட்ட செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் ர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி சர்வத் ஜஹானும் பங்கேற்றார்.

அங்கு, இலங்கையினால் அமுல்படுத்தப்பட்ட சீர்திருத்த வேலைத்திட்டத்தின் மூலம் கிடைத்துள்ள பெறுபேறுகள் போற்றத்தக்கவை எனவும், இதன் மூலம் வெற்றிகரமான முன்னேற்றத்தை அடைந்து வருவதாகவும் பீட்டர் ப்ரூவர் தெரிவித்தார்.

இலங்கை அமுல்படுத்தியிருக்கும் பொருளாதார மறுசீரமைப்புக்கான வேலைத் திட்டத்தின் பிரதி பயன்கள் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளதென சுட்டிக்காட்டிய அவர், இலங்கையின் பணவீக்கம் எதிர்பார்த்ததை விடவும் வேகமாக குறைந்துள்ளதாகவும், அதற்காக இலங்கையின் ஆளும் தரப்பு முன்னெடுத்திருக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியதெனவும் தெரிவித்தார்.

நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதானி பீட்டர் ப்ரூவர் மற்றும் பிரதித் தலைவர் கட்சியரினா ஸ்விரிட்ஸென்கா ஆகியோரால் வெளியிடப்பட்ட செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:

நான்கு வருடங்கள் நீட்டிக்கப்பட்ட நிதி வசதி (சிய்ய்) மூலம் ஆதரவளிக்கப்படும் பொருளாதார சீர்திருத்த வேலைத் திட்டத்தின் கீழ் இரண்டாவது மீளாய்வின் போது இலங்கை அதிகாரிகளுடனான பணிக்குழு மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அதன்படி அதற்கான பேச்சுக்களும் 2024 ஆண்டு சட்டத்துக்கமைய நிறைவு செய்யப்பட்டுள்ளன. இந்த நீட்டிக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டுக்கமைய 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் வசதிக்கான அனுமதியை

தொடர்ச்சி 9ம் பக்கம்....

# பொருளாதார நெருக்கடிக் காலத்தில் பெண்களின் பங்களிப்பு பேசுபொருள்

(பாறுக் ஷிஹான்)

பொருளாதார நெருக்கடி காலத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட சவால்களை எதிர்கொண்டிருந்தும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெண்களின் பங்களிப்பு பேசுபொருளாகிறது எனக் கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் குறிப்பிட்டார்.



'பெண்களுக்கு ஆதரவளிப்பதன் மூலமாக பொருளாதார நிலைமாற்றம், நெருக்கடி நிலமைக்கு ஒரு பதிலடி' எனும் தொனிப் பொருளிலான இந்நிகழ்வு சர்வதேச மகளீர் தினத்தையொட்டி கல்முனை வடக்கு பிரதேச செயலக மண்டபத்தில் புதன்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தவை வருமாறு -

ஆண், பெண் என வேறுபாடுகள் இருந்தாலும் எல்லோரும் மனித வர்க்கமாக வகைப்படுத்தப்பட்டதுடன் கௌரவமாக வாழக்கூடிய உரிமையை அவர்களுக்கு உறுதிப்படுத்தல் வேண்டும். பெண்களின் தொழிலானது பொருளாதார நெருக்கடி காலத்தில் பெரிதும் பாதிப்புக்குள்ளானது. பாரம்பரிய வரம்புகளால் கட்டுண்டமையால் அதன் பிரதிபலனை பெண்கள் அனுபவிக்க முடியாதிருக்கிறது.

ஆனால் பெண் தொழிலாளர்களின் உரிமைகள் அதன் நிலைமைகள் கவலைக்கிடமாகவுள்ளது. பெண்களுக்கெதிரான பாலியல் துஸ்பிரயோகங்கள் இலங்கையில் அதிகளவில் காணக்கூடியதாகவுள்ளது. ஆண்களிலும் பார்க்க பெண் வியாபாரிகள் கடன் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் காணப்படுகிறது. ஆனால் கடன்களைக் கூடுதலாகப் பெறுகின்ற வர்க்கமாக பெண்கள் இருக்கிறார்கள்.

இன்று கடன் வழங்கும் வங்கிகள் நாளுக்கு நாள் திறக்கப்பட்டு வருகின்றன. இவ் வங்கியில் கடன் பெற்றவர்களாகவும். இலகு கடனில் பொருள்களைக் கொள்வனவு செய்பவர்களாகவும் குடும்பப் பெண்கள் இருக்கின்றனர். இவர்கள் மாதந்தோறும் கடன் பணத்தை கட்ட முடியாதிருக்கும் இக்கட்டான சூழ்நிலை ஏற்படுமாகவிருந்தால் கடன் முகவர்களுக்குப் பயந்து சொந்த வீட்டில் இருக்க முடியாது மறைந்து வாழ முற்படுகின்றனர். காலப் போக்கில் இவ்விடயம் அவர்களுக்கு





உளரீதியான தாக்கத்தை ஏற்படுத்தி உயிரை துச்சமாக நினைத்து செய்கின்ற தற்கொலைச் சம்பவத்தையும் அறியக்கூடியதாக இருக்கிறது என தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி எம்.எம்.மஸ்ருபா கலந்து கொண்டு விசேட சொற்பொழிவாற்றினார்.

பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், பொருளாதார நெருக்கடி காலத்தில் தொழிலாளர் வர்க்கத்தினர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றியும், பொறியியலாளர் எம்.எம். பதுலுல் ஹக் பொருளாதார நெருக்கடி காலத்தில் பெருந்தோட்டத் துறையினருக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றியும், எம்.ஏ.சி.எம். ஜவாஹிர் பொருளாதார நெருக்கடி காலத்தில் வேலைவாய்பிற்காக புலம்பெயர்ந்து வாழ்கின்ற பெண்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றியும், திருமதி கே. ஜெனிற்றா பொருளாதார நெருக்கடி



காலத்தில் சுதந்திர வர்த்தக வலயத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றியும் விரிவுரையாற்றினர்.

இந்நிகழ்வில், அரச அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், சிவில் மக்களும் கலந்துகொண்டனர். (05)

## காலி நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் நிர்மானம் தொடர்பில் கலந்துரையாடல்



நிர்மாணிக்கப்பட்டு வரும் காலி பெலிகஹா புதிய நீதிமன்ற வளாகத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் நீதி, சிறைச்சாலை விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் புதன்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

தற்போது காலியில் புதிய நீதி மன்றக் கட்டடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் சுமார் 90 வீதம் நிறைவடைந்துள்ளதுடன், நீதிமன்ற கட்டடத்தொகுதி திறப்பதற்கு முன்னதாக அது தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

காலி நீதிமன்ற வளாக சட்டத்தரணிகளுக்கு புதிய அலுவலக வளாகங்களை நிர்மாணிப்பதற்கு புதிய காணி வழங்கல் மற்றும் நீதிமன்றப் பணிகளுக்காக வரும் மக்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.



சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன, மத்திய மாகாண ஆளுநர் லலித் யு. கமகே, விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் இசுரு தொடங்கொட, நீதி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.




காலியில் 4 மாடிகளுடன் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய நீதிமன்ற வளாகத்தை நிர்மாணிப்பதற்கு 1200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (05)

## மாணவர்களுக்கு மகிழ்வூட்டும் திறன் வகுப்பறைச் செயற்பாடு









கடந்த 29 ஆம் திகதி புத்தளம் நகரில் அமைந்துள்ள செய்னாப் முஸ்லிம் பெண்கள் ஆரம்பப் பாடசாலையில் ஜஎம்எச்ஓ மற்றும் ரட்ணம் பவுண்டேசனால் வழங்கப்பட்ட சிமாட் போட்; கற்றல் உபகரணத்தொகுதி உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டு ஆசிரியர்கள் மாணவர்களின் பயன்பாடு அவதானிக்கப்பட்டது.



இப்பாடசாலையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம் மாணவ மாணவியர் கல்விகற்கின்றனர். மாணவர்களின் வரவேற்பும் ஒழுங்கமைப்பும் மனதைக் கவர்ந்தது.

அவர்களின் திறன் வகுப்பறை செயற்பாட்டை பார்த்தபோது ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் மிகுந்த விருப்புடன் கற்றலில் ஈடுபட்டனர்.

பாடசாலைக் காலம் பரீட்சை நடைபெற்றமையால் குறைவாக இருந்தமையால் திறன் பலகை செயற்பாடு குறைவாகவே இருந்தபோதிலும் அதனை பயன்படுத்தும் ஆர்வம் பெருமளவில் வெளிப்பட்டது. இதனை மதிப்பீட்டின் போது எல்லோருமே உணர்ந்தோம்.

இப்பாடசாலையின் வளர்சிக்கு இத்திறன் வகுப்பறை மிகுந்த பயன்தரும் ஒன்று என அதிபரும் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினரும் பெற்றோரும் குறிப்பிட்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காணி விடுவிப்பும் அரசியல் பயனும்

**அரசுத் தலைவர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார். வலி. வடக்குப் பகுதியில் படையினரால் விடுவிக்கப்பட்ட காணிகளை மக்களிடம் மீளக் கையளிப்பதும் அவரது இந்தப் பயணத்தின் ஒரு நோக்கம். 33 வருடங்களின் பின்னர் அந்த நிலங்கள் மீண்டும் மக்களிடம் கையளிக்கப்படுகின்றன. இத்தனை ஆண்டுகள் கடந்தாவது அந்த மக்களுக்கு அவர்களது சொந்த இடங்கள் திரும்பக் கிடைத்திருப்பது மகிழ்ச்சிகரமான விடயம்.**

**வலி. வடக்கில் பலாலி மற்றும் காங்கேசன்துறை படைமுகாம்களை ஒட்டி 1990ஆ; ஆண்டு ஆக்கிரமிக்கப்பட்டவை இந்தக் காணிகள். இவற்றை மீட்டுத் தருமாறு மக்கள் அறப் போராட்டங்களிலும் சட்டப் போராட்டங்களிலும் நீண்ட காலமாகவே மேற்கொள்ளப்பட்டுவந்தன. இப்போது அதில் ஒரு சிறு பகுதி விடுவிக்கப்படுகின்றது.**

**இந்தக் காணிகளை ரணில் – மைத்திரி நல்லாட்சிக் காலத்தில் இருந்து விடுவிப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டு வந்தது. என்றாலும் அவற்றுக்கு இப்போதுதான் விடிவுகாலம் பிறந்திருக்கிறது. சிறந்த இருவாட்டி மண்ணைக் கொண்ட இந்தக் காணிகள் விவசாயத்திற்குச் சிறப்பானவை. இந்தப் பகுதிகளில் மக்களின் பெருளாதாரம் இந்த மண்ணை நம்பிய தோட்டப் பொருளாதாரமாகவே இருந்தது. ஆனால், 30 வருடங்களாக அந்த இடத்திலிருந்து மக்கள் விரட்டியடிக்கப்பட்டதுடன், பின்னாட்களில் அந்தக் காணிகளில் விவசாயம் செய்து படையினர் வருமானம் தேடினர்.**

**நீண்ட இழுபறிகளின் பின்னர் சுமார் 2---00 ஏக்கருக்கும் அதிகமான காணி இப்போது விடுவிக்கப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் என்பன வரவுள்ள நிலையில் இந்தக் காணிகள் விடுவிக்கப்படுவது, அரசுத் தலைவருக்கு அரசியல் ஆதாயங்களை ஈட்டித்தரவேண்டும் என்பது ஆளும் தரப்பினரின் நோக்கமாக இருக்கலாம். ஆனால், காணிகளை விடுவிப்பதில் காட்டப்பட்ட கால இழுத்தடிப்பு இந்தப் பகுதி மக்களிடம் ஏற்படுத்திய சலிப்பை மீறி காணி விடுவிப்புவாக்குகளாக மாறுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவே. அதுமட்டுமல்ல இன்னும் பல காணிகள் விடுவிக்கப்படவேண்டியுள்ளன. அவை எப்போது விடுவிக்கப்படும் என்று அவற்றின் உரிமையாளர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.**

**எனவே அரசியல் பிரதிபயன்களை எதிர்பார்ப்பதாக இருந்தால் உரிய காலத்தில் உடனடியாகவே இதுபோன்ற காரியங்களை அரசுத் தலைவர் ஆற்றியிருக்கவேண்டும். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று பெருமெடுப்பில் அறிவித்துவிட்டுப் பின்னர் அதில் ஒரு துரும்பைக்கூட தூக்கி அந்தப் பக்கம் இந்தக் பக்கம் நகர்த்தாத காணி விடுவிப்பு விடயத்திலும் மிக மெத்தனமாக நடந்துகொண்டிருப்பது அவர் எதிர்பார்க்கக்கூடிய அரசியல் பயன்களைத் தராது. குறைந்தபட்சம் இந்தக் காலத்தில் அவர் முழுக் காணிகளையும் விடுவித்தாரானால் ஒருவேளை அவர்கள் எதிர்பார்க்கும் பயன் கிடைக்கக்கூடும்.**

# கட்டெறும்பும் தேய்ந்து...

**என். சத்திய மூர்த்தி**

இந்தியாவில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி விடுதலையான சாந்தன், சென்னை அரசு மருத்துவமனையில் உயிர் விட்டாலும், விட்டார், இங்கே இலங்கையின் வட மாகாணத்தில் அவரைத் தியாகி ஆக்கி பார்ப்பதில் ஒரு சிலர் அதிக முனைப்பைக் காட்டுகின்றனர். அதைவிட முக்கியமாக, சாந்தனை இந்தியா தான் கொன்றது என்றும், அதற்கு இலங்கை அரசு துணை நின்றது என்றும் புதிதாக இன்னுமோர் கட்டுக்கதையை அவிழ்த்து விட்டுள்ளார்கள்.

இந்தியாவின் கதை எப்படியேனும் போகட்டும். ஆனால், அண்மைக் காலங்களில், தமிழ் அரசு கட்சியின் தலைவர் என்ற போர்வையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனி-ன் சில முன்னெடுப்புகள் தந்தை செல்வாவின் பெயருக்கும் புகழுக்கும் களங்கம் ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளன. குறிப்பாக, அவர் நிறுவிச் சென்ற தமிழ் அரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கையையே காவு கொடுக்கும் விதமாகச் சிறீதரன் நடந்து கொள்கிறார் என்ற வகையில் கருத்துத் தோன்றி உள்ளது. அதில் உண்மையும் உள்ளது.

தந்தை செல்வா, தமிழ் அரசுக் கட்சியை காந்தீய பாதையில் முன் நடத்திச் சென்றார். அஹிம்சை மற்றும் சத்தியாகிரகப் போராட்ட முறைகளால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று திடமாக நம்பினார். அல்லது, சத்தியாகிரம் தவிர்த்த ஆயுதப் போராட்டம் அரசியல் தீர்விற்கு வழி விடாது. மாறாக, தமிழர்களின் இன அழிவிற்கே கட்டியம் கூறும் என்று அவர் கருதினார் என்றுகூட அதனை எடுத்துக்கொள்ளலாம். இலங்கை அரசியல் குறித்த அவரது எண்ணம், அதிலும் குறிப்பாக ஆயுத போராட்டம் குறித்த அவரது முடிந்த கருத்துகள் எத்தனை தூரம் உண்மையாக உருவெடுத்தது என்பது தற்போது அனைவருக்குமே புரிந்திருக்கும்.

எது எப்படியோ, தந்தை செல்வாவும் அவரது காலத்திற்கு பின்னர் தமிழ் அரசு கட்சிக்கு தலைமை தாங்கி வழி நடத்திய அமிர்தலிங்கம், சம்மந்தன் ஆகியோரும் ஒரு விடயத்தில் உறுதியாக இருந்தனர். தந்தை செல்வா விட்டுச் சென்றதைப் போன்றே தமிழ் அரசு கட்சி, மிதவாத அரசியல் நெறிமுறைகளையும் வழிமுறைகளையுமே தொடர்ந்து கடைபிடிக்கும் என்பதில் அந்தத் தலைமைகளும் அவர்கள் கால கட்சி மற்றும் சமூதாயத் தலைவர்களும் உறுதியாக இருந்தனர்.

அதனால்தான், ஒரு காலகட்டம் வரை, தமிழ் அரசுக் கட்சியில் முன்னாள் போராளிகளை உறுப்பினர்களாக உள்வாங்கிக் கொண்டாலும் அவர்களுக்கு முக்கியமான கட்சிப் பதவிகள் வழங்கப்படாமல் இருந்தன. அதனை, சம்மந்தனுக்கு பின்னர் மாவை சேனாதிராசா தமிழ் அரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் உடைத்தெறிந்தார்.

மாவை, கட்சியின் தேர்வு என்பதைவிட, சம்மந்தனின் நேரடித் தேர்வு எனலாம். அவரது முடிவைக் கட்சியின் அனைத்து தலைவர்களும் தொண்டர்களும் ஏற்றுக்கொண்டார்கள் என்பது வேறு விடயம். அதுகூட தமிழ் அரசில் உள்கட்சி ஜனநாயகம் படும்பாட்டை பறைசாற்றியது.

அவ்வாறாகவே, மாவையும், கட்சியின் பொதுகுழுவை பல ஆண்டுகளுக்கு கூட்டாமலே தன்னாட்சி நடத்தி வந்தார். இன்று அவர் பதவியில் இல்லை என்றாலும், அவர் காரணமாக, கட்சியின் 'வீடு' சின்னத்தைத் தேர்தல் ஆணையம் முடக்கி விடுமோ என்ற கவலை பல தொண்டர்களுக்கும் உள்ளது.

### கேட்கப்படும் கேள்வி

மாவையார் மிதவாத அரசியலை ஏற்றுக்கொண்டே தமிழ் அரசுக் கட்சியில் உறுப்பினரானார். அவரது செயல்பாட்டு வேகம் எவ்வாறு இருந்தாலும், கட்சி உறுப்பினராகவோ, தலைவராகவோ அவர் போராளி அரசியலோடு ஒரு போதும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. இதில் கட்சித் தலைவர் என்ற ஹோதாவில் சிறீதரனின் செயல்பாடுகள் பலரையும் முகம் சுளிக்கவைத்துள்ளது என்பது உண்மை. ஆனால், சிறீதரனிடமிருந்து இத்தகைய செயல்பாடு எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே.

பெருவாரியான உறுப்பினர்கள் அவரைத் தலைமைப் பதவிக்குத் தெரிவு செய்தார்கள் என்பது உண்மை. அந்த வகையில், அவரை எதிர்த்து தலைமைப் பதவிக்கு போட்டியிட்டு தோல்வி அடைந்த மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் மிதவாத அரசியல்வாதி என்பதும், மிதவாத அரசியலுக்கே அவர் சரிப்பட்டு வருவார் என்பதும் அசைக்க முடியாத உண்மை.

சிறீதரனுக்குப் பதிலாக சுமந்திரனே கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டுமா, என்பதல்ல தற்போதைய கேள்வி. மாறாக, சிறீதரனின் தேர்வும் தொடர்ந்து வரும் அவரது செயல்பாடுகளும் தமிழ் அரசை ஒரு போராளி கட்சியாகவே மாற்றி விட்டதா என்பதுதான் கேட்க்கப்பட வேண்டிய கேள்வி. சமூக வலைதளங்களில் தற்போது கேட்கப்படும் கேள்வியும்கூட.

### முதல் மரியாதை

இதற்கான காரணங்கள் உண்டு. மிதவாதக் கட்சியான தமிழ் அரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், சிறீதரன் முதலில் சென்று மரியாதை செலுத்தியது, தந்தை செல்வாவின் நினைவிடத்தில் இல்லை. மாறாக இனப்போரட்டத்தை வன்முறை வழியில் முன்னெடுத்த விடுதலை புலிகள் அமைப்பின் 'மாவீரர் துயிலிடத்தில்'தான் சிறீதரன் தனது முதல் மரியாதையைச் செலுத்தினார்.

அண்மை காலத்தில், ராஜீவ் காந்தி கெலை வழக்கில் தண்டிக்கப்பட்டு விடுதலை அடைந்து இந்தியாவில் உயிர் இழந்த சாந்தனின் உடலுக்கு சிறீதரனும் மரியாதை செய்தார். அப்போது அவர், சாந்தனின் உடலுக்கு விடுதலை புலிகள் இயக்கத்தின் கொடியை ஒத்ததான நிறத்திலிருந்த சிவப்பு, மஞ்சள் நிறக் கொடியைப் போர்த்தி தனது மரியாதையைச் செலுத்தினார்.

இதன் மூலம் சிறீதரன் மிதவாத தமிழ் அரசு கட்சியின் தலைவரா, அல்லது, இலங்கை அரசினால் இன்னமும் தடை செய்யப்பட்டுள்ள ஓர் அமைப்பின் பிரதிநிதியா, என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்தக் கேள்விக்கான விடையை சிறீதரன் அளிக்க வேண்டும். சிறீதரன் மட்டுமே அளிக்க முடியும்.

### உள்வீட்டு குடைசல்கள்

இடைப்பட்ட காலத்தில், தமிழ் அரசுக் கட்சியின் உள்வீட்டு குடைசல்கள் குறித்து இரு தரப்பினரும் வவுனியாவில் சந்தித்து கலந்து பேசி இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக, நீதிமன்றில் இருக்கும் வழக்குகள் குறித்து சிறீதரன் மற்றும் சுமந்திரன் நேரடியாகப் பேசியுள்ளார்கள் என்றும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முக்கியமாக, அந்த பேச்சுக்களில் கட்சியின் முன்னாள் தலைவர் என்ற நிலையில் மாவையாரும், சி.வி.கே.சிவஞானம், மருத்துவர் சத்தியலிங்கம், போன்ற பிற மூத்த தலைவர்களும் கலந்து கொண்டுள்ளார்கள். சுமந்திரனோடு பிணங்கி, மற்றொரு சட்டதரணியான தவராசா கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்துள்ளார். என்றாலும், இரு தரப்பு பேச்சுக்களில் சிறீதரன், சுமந்திரன் ஆகியோர் தவிர பிற தமிழ் தலைவர்களும் கலந்து கொண்டமை வரவேற்கத்தக்கது. அதேசமயம், அவர்கள் இருவருமே, தற்போதைய நீதிமன்ற பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகள், ஏதோ இரு வீட்டார் குடும்பப் பிரச்சினை என்று கருதி, பிறரை வெட்டிவிட முயற்சிக்கக்கூடாது. இது கட்சிப் பிரச்சினை. ஏன், தமிழ்ச் சமூகத்தின் பிரச்சினையும்கூட.

### எதிர்காலக் கொள்கை

தற்போது, தமிழ் அரசுக்கு யார் தலைவர் என்பதைவிட அதி முக்கியமான கேள்வி உள்ளது. அது கட்சி எதிர்காலத்தில் எந்த திசையில் பயணிக்க வேண்டும் என்பது குறித்த விடயம். அதற்காக, சிறீதரனை புறந்தள்ளி, சுமந்திரன் அல்லது மற்றொரு மிதவாதியை கட்சி தலைவராக்கவேண்டும் என்பதல்ல பொருள்.

சிறீதரனின் அரசியல் பின்புலம், நிலைபாடு ஆகியவற்றை அறிந்திருந்தே, கட்சித் தொண்டர்கள் அவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளனர். அதாவது, அவரது கொள்கைகளுக்கு ஆதரவளிக்கும் முகமாகவே, பெரும்பான்மையான உறுப்பினர்கள், சிறீதரனை கட்சி தலைவராக வரிந்துள்ளனர்.

அவ்வாறென்றால், சிறீதரன் முன்னெடுக்கும் அரசியல் நிலைபாடுதான் தமிழ் அரசுக் கட்சியின் எதிர்காலக் கொள்கை மற்றும் செயல்பாட்டு விதி முறைகளா? அவ்வாறென்றால், அதனை சிறீதரன் தெளிவுபடுத்த வேண்டாமா?

அவ்வாறு இல்லாமல், சிறீதரன் வகையாறா, தமிழ் அரசின் கொள்கைகளை உள்ளிருந்தபடியே சிறிது சிறிதாக சிதைக்கப் போகிறார்கள் என்றால், அதுதான் அவர்களுடைய திட்டம் என்றால், அதற்கு புலம்பெயர்ந்தோர் ஆதரவும் அனுசரணையும் இருக்குமென்றால், கட்சியின் மிதவாத அரசியல் தலைவர்களும் தரப்புகளும் என்ன செய்யப் போகிறார்கள்?

இந்தக் கேள்விகளுக்கான பதில்களை இரு தரப்பினரும் தெளிவாக்க வேண்டும். அதிலும் உடனடியாகவே தெளிவாக்க வேண்டும். இல்லை என்றால், இரு தரப்பினரின் வாத-பிரதிவாதங்கள் இல்லாமலே, கட்சி பிரிந்து உடைந்து காணாமலே போய்விடும். என்ன, கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி, அந்த கட்டெறும்பும் தேய்ந்து சிற்றெறும்பாகிய கதைதான் என்கிறீர்களா?

# வெடுக்குநாறியில் பொலிஸாரின் உரிமை மீறல்கள் குறித்து யாழ். பல்கலை மாணவர்கள் முறைப்பாடு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதிவு செய்தனர்







வெடுக்குநாறி மலையில் கடந்த சிவராத்திரி தினத்தன்று இலங்கை பொலிஸ் மற்றும் தொல்லியல் திணைக்களம் என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட வழிபாட்டு உரிமை, உயிர் வாழ்வதற்கான உரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பில் அன்றைய தினம் சிவராத்திரி வழிபாடுகளிற்குச் சென்றிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் சிறிலங்காவின் மனிதவுரிமை ஆணைகுழுவின் யாழ் பிராந்திய அலுவலகத்தில் புதன்கிழமை முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டது.

சிவராத்திரி தினத்தன்று பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்டவர்கள் வழிபாடுகளிற்காகச் சென்றிருந்த நிலையில் நீண்ட நேரம் வழிபாடாற்றுவதிலிருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்ததோடு, செல்லும் பாதைகளெங்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு அனைவரும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வழிபாட்டுரிமைகள் மீறப்பட்டிருந்தன.

பெருமளவில் சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்டவர்கள் பங்குகொண்டிருந்த பூசை வழிபாடுகளில் தாகத்திற்கு அருந்துவதற்காக கொண்டு சென்ற குடிநீரைக் கூட பறித்து ஊற்றியும், தாங்கியில் வைக்கப்பட்டிருந்த நீரைத்திறந்துவிட்டும், நீரை உள்ளே கொண்டு செல்லவிடாமல் தடுத்தும் மனிதாபிமானத்திற்கு விரோதமான செயல்களில் சிறிலங்கா பொலிஸார் செயற்பட்டிருந்தமை உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhepees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கலைஞர்களின் தொழில்,கலாசார உரிமைகள் காக்கும் சட்ட வரைவு

## அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது


இலங்கை கலைஞர்களின் தொழில் உரிமைகள், பொருளாதார மற்றும் கலாசார உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய புதிய சட்டமூலமொன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்றும் அதன்படி தயாரிக்கப்பட்ட தோராயமான வரைவு கையளிப்பு புதன்கிழமை காலை நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

சட்டமூலத்தை சட்டமா அதிபர் மற்றும் வரைபவருக்கு உடனடியாக அனுப்பிவைப்பதற்கும் மே மாதத்துக்குள் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அமைச்சின் செயலாளருக்கு நீதி அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

கலைஞர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலம், கலைஞர்களின் தொழில்திறனைமேம்படுத்தவும், அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்தவும் எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் உயர்தர கலைப் படைப்புகள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இதற்காக, புதிய ஒழுங்குமுறைஅமைப்புதயாரிக்கப்படுகிறது. அவசரமாக செய்யப்பட வேண்டும்.

நீதிஅமைச்சின்ஊடகஆலோசகர்கலாநிதி ஹர்ஷ பி. அபேகோனின் முயற்சியின் பேரில், நிபுணர் கலைஞர்களால் வரைவு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது, இதற்காக கலைஞர்கள் தங்கள் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க முடியும்.

புதிய கரடுமுரடான வரைவைத் தயாரிப்பது தொடர்பாக பல்வேறு கலைத் துறைகளைப் பிரதிநிதித் துவப்படுத்தும் நிபுணத்துவ கலைஞர்களிடமிருந்து கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப்பெறுவதற்காக பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.



நீதி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க, நீதி அமைச்சின் ஊடக ஆலோசகர் கலாநிதி ஹர்ஷ பி. அபேகோன், சிரேஷ்ட கலைஞர்களான சமன் டி சில்வா, ரொஹான் டி சில்வா, நடிகா குணசேகர, மனிஷா ஷியாமலி, டக்ளஸ் சிறிவர்தன, சுதத் ரோஹனனா உட்பட பல கலைஞர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (05)

# ஜனனம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இப்தார் தின நிகழ்வுகள் கொழும்பில்





அரசியல், சமூக, பொதுநல, ஊடக செயற்பாட்டாளரும், ஐ டி எம் என் சி சர்வதேச கல்வி நிறுவனத்தின் தலைவருமான கலாநிதிவிநாயகமூர்த்திஜனகனின் எண்ண கருவில், இவருடைய ஜனனம் அறக்கட்டளை யின் ஏற்பாட்டில், ஐ டி எம். என் சி சர்வ தேச கல்வி நிறுவனத்தின் நிதி பங்களிப்பில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவோம் என்கிற மகுடத்திலான இப்தார் நிகழ்வு கொழும்பு - 02 இல் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

பொதுவாக இனங்களுக்கு இடையிலான குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு இடையிலான உறவு பாலமாக அமைந்த இந்நிகழ்வில் பல நூற்றுக் கணக்கானோர் பங்குபற்றினார்கள். (05)

# கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு தேர்தல் மூலமாக புதிய தலைவர் தெரிவு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2024ஃ25 ஆம் ஆண்டுக்கான தலைவராக தேர்தல் மூலமாக தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட சட்டத்தரணி எம். ஐ.றைசுல் ஹாதி தெரிவாகியுள்ளார்.

இலங்கையின் 60 வருட வரலாற்றைக் கொண்ட கல்முனை சட்டத்தரணிகள்சங்கத்தின் 2024ஃ25 ஆண்டுக்கான வரலாற்றில் முதல் தடவையாகசங்கத்தலைவரைதெரிவு செய்யும் தேர்தல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன்போதுதலைவர்தெரிவிற்காக சட்டத்தரணிகளான ஐ.றைசுல் ஹாதி மற்றும் ஆரிப் சம்சுதீன் ஆகியோர் போட்டியிட்டனர். இதில் சிரேஷ்ட சட்டத்தரணி எம். ஐ.றைசுல் ஹாதி அதிகளவான வாக்குகளை பெற்று கல்முனைசட்டத்தரணிகள்சங்கத்துக்கு புதிய தலைவராகத் தெரிவானார்.

மேற்படி புதிய நிர்வாக சபையை தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் கல்முனைமாவட்டநீதிவான்நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றதுடன் தொடர்ந்து இந்த வருடாந்த பொதுக் கூட்டத்தின்போதுநடப்புவருடத்திற்கான நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

தொடர்ந்து செயலாளராக சட்டத் தரணி ரோசன் அக்தரும் , பொருளாளராக சட்டத்தரணி என்.ஏ.எம்.அஸாம் ஆகியோரும்ஏகமனதாகபோட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.அத்துடன் இதர பதவி நிலைகளுக்கும் ஏனைய நிர்வாகிகளும்தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)



## வெடுக்குநாறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு 13ஆவது திருத்தத்துக்கு எதிராக வாக்களித்து நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கினார்.ஆகவே சபாநாயகரை நாங்கள் பாதுகாப் போம்.

அரசலமைப்பு பேரவையின் செயற்பாடுகள் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில்குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்பு பேரவையின் இரண்டு உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு ஜனாதிபதிக்கு அரசமைப்பினால் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சட்டம் மற்றும் ஒழுங்கை செயற் படுத்தும் பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு அரசமைப்பின்19ஆவதுதிருத்தத்தால் வழங்கப்படவில்லை.

19 ஆவது திருத்தத்தில் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடியால் பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் பெரும்இழுபறிநிலைஏற்பட்டது.இந்த நிலைமைக்கு அனைவரும் வெட்கப்படவேண்டும்.

வெடுக்குநாறி மலை விவகாரத்தை குறிப்பிட்டுக் கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ்பிரதிநிதிகள்நாடாளுமன்றத்தில் பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டார்கள். தெற்கில் உள்ள மத சுதந்திரம் வடக்குக்கும் வேண்டும் என்று எதிர்க்கட்சித்தலைவர்குறிப்பிடுகிறார்.

வடக்கில்மதசுதந்திரம்உள்ளதா ? என்பதை முதலில் ஆராய வேண்டும். வெடுக்குநாறிமலையில் பௌத்ததொல்பொருள்மரபுரிமைகள் பொதிந்துள்ளன. வெடுக்குநாறி மலையில் இருந்த பழமையான பௌத்த தூபி இடித்தழிக்கப்பட்டு அதன் மீது சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தையில் உள்ள கோயிலை இடித்து பௌத்த வழிபாடுகளில் ஈடுபட முடியுமா? ஆகவே தெரியாத விடயங்களை பற்றி எதிர்க்கட்சித் தலைவர் பேசக் கூடாது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் பிரதிநிதிகள் தமிழ் மக்கள் மத்தியில் இனவாதம் பேசி பிரச்சினைகளை தூண்டி விடுகிறார்கள்.பின்னர் கொழும்புக்கு வந்துபோராட்டத்தில்ஈடுபடுகிறார்கள். மீண்டும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குச் செல்கிறார்கள்.

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதால்தான் இவர்கள் இவ்வாறு சுதந்திரமாக வாழ்கிறார்கள். பௌத்த தொல்பொருள் மரபுரிகளை அழித்து அதன்மீதுபிறமதஅடையாளங்களை காட்சிப்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். சிங்கள பௌத்தர்களின் பொறுமையை கோழைத்தனம் என்று கருத வேண்டாம் என்றார்.

## சுமந்திரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமையினால்,அதனைநீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியாது என சட்டமா அதிபர் இதன்போது தெரிவித்தார். அதன்படி, மனுவை விசாரணையின்றி தள்ளுபடி செய்ய நீதியரசர்கள் தீர்மானித்தனர்.

இந்நிலையில், உரிய முறையில் விடயங்களை ஆராயமல் குறித்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக, அந்த மனுவை நேற்று மீண்டும் சமர்ப்பித்து ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

மனுவை மீண்டும் மற்றுமொரு நீதியரர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதிவழங்குமாறு மனுதாரரான ஜனாதிபதி சட்டத்தரணி மந்திரன் கோரினார்.



## பொருளாதாரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2023 மார்ச் 20 நாணய நிதியத்தின் நிர்வாகக் குழு வழங்கியிருந்தது.

பொருளாதார மறுசீரமைப்புக்களின் பிரதிபலன்கள் கிட்ட ஆரம்பித்துள்ளன. அதனை நிலையாக தக்கவைத்துகொள்ள நிர்வாக குறைப்பாடுகள் மற்றும் மோசடி செயற்பாடுகளைத் தடுப்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

பணிக்குழு மட்டத்திலான இணக்கப்பாடு சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழு மற்றும் அதன் நிதி நிறைவேற்றுக் குழுவின் அனுமதிக்கமைய எதிர்வரும் நாட்களில், அதிகாரிகளால் முழுமையான செயற்பாடுகளை முன்னெடுத்தல், பலதரப்பு பங்குதாரர்களின் நிதி பங்களிப்பை உறுதிசெய்தல், மறுசீரமைப்புக்கான காலம், நடவடிக்கைகளைத் தொடர்ந்து செயல்படுத்துதல், கடன் மறுசீரமைப்புடன் போதுமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை கருத்தில் கொண்டு, நிதி உறுதிப்பாட்டுக்கான மீளாய்வை நிறைவு செய்தல் உள்ளிட்ட படிமுறைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பது அவசியமாகும்.

நிறைவேற்றுக் குழுவின் மீளாய்வு முடிவடைந்த பின்னர், இலங்கைக்கு 337 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி கிட்டும். அதன்படி சர்வதேச நாணய நிதியம் இதுவரையில் இலங்கைக்கு வழங்கியிருக்கும் மொத்த தொகை; ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

பண வீக்கத்தை விரைவாகக் மட்டுப்படுத்தல், வெளிநாட்டு கையிருப்பு வலுவடைதல், பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப அறிகுறிகள் உள்ளிட்ட பாராட்டுக்குரிய பிரதிபலன்களுடன் நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் நிலையான மறுசீரமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அதிகாரிகள் முன்னேற்றத்தை எட்டியுள்ளனர்.

குறிப்பிடத்தக்க நிதிச் சீர்திருத் தங்களைத் தொடர்ந்து இலங்கையின் பொது நிதி முகாமைத்துவம் வலுவடைந்திருக்கிறது. சமூக செல வினங்களுக்கான குறிகாட்டிகளை தவிர ஏனைய அனைத்து செயல்திறன் நியதிகள் மற்றும் குறி காட்டி இலக்குகள் 2023 டிசம்பர் இறுதிக்குள் எட்டப்பட்டிருப்பதன் மூலம் செயல்திறன் வலுவடைந் திருக்கிறது.

2024 பெப்ரவரி இறுதிக்குள் பல மூலோபாய நியதிகள் காலம் தாழ்த்தியேனும் நிறைவு செய்யப்பட்டிருப்பதோடு, சில துறை களில் இன்றும் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுகின்றன.

பொருளாதார நிலை படிப்படியாக மேம்படும். 2023 ஆம் ஆண்டின் மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகளில் 1.6 மற்றும் 4.5 சதவிகித வளர்ச்சி பதிவாகியுள்ளது. உயர் அதிர்வெண் பொருளாதார குறிகாட்டிகள் உற்பத்தி, நிர்மாணம் மற்றும் சேவைத் துறைகளில் தொடர்ச்சியான வளர்ச்சியைக் காட்டுகின்றன. 2022 செப்டம்பரில் 70 சதவீதமாக காணப்பட்ட பணவீக்கம் 2024 பெப்ரவரியில் 5.9 சதவீதமாக குறைந்துள்ளது.

மத்திய வங்கியின் குறிப்பிடத்தக்க அந்நியச் செலாவணி கொள்முதல் மூலம் 2024 பெப்ரவரி இறுதிக்குள் உத்தியோகபூர்வ கையிருப்பு 4.5 பில்லியனாக உயர்வடைந்திருக்கிறது.

பொருளாதாரத்தின் முன்னேற் றத்திற்காக நிலையானதும் அனைத்தும் உள்ளடங்கியதுமான பாதைக்கு கொண்டுச் செல்வதற்கு மறுசீரமைப்பு வேகத்தை தக்க வைத்துகொள்வது அவசியமாகும். பொருளாதார சீர்திருத்தங்களுக்கு இலங்கையின் அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது. 2025 மற்றும் அதற்குப் பின்னரான வரு மான வழிமுறைகளை மேம்படுத் தும் அதேநேரம் சொத்து வரியை அறிமுகப்படுத்துவதும் முன் னேற்றத்தை ஈட்டித்தரும்.

வருமான நிர்வாகம் மற்றும் ஊழலுக்கு எதிரான முயற்சிகளை மேம்படுத்துவதும் வரி சேகரிப்பை மேம்படுத்துவதற்கு முக்கியமான காரணியாகும்.

எரிபொருள் மற்றும் மின்சார கட்டணங்கள் மீதான திருத்தங்களை உரிய வகையில் பேணுவதால் அரச நிறுவனங்கள் எதிர்கொள்ளும் நிதி அச்சுறுத்தல்களை மட்டுப் படுத்திக்கொள்ள உதவும். பணவீக்கம் எதிர்பார்த்ததைவிட வேகமாக குறைந்திருந்தாலும், பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்தவும், பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்ப டுத்துவதற்கான கண்காணிப்பு அவசியப்படுகிறது.

உத்தியோகபூர்வ கடன் வழங்குனர்கள் குழு மற்றும் சீனாவின் இறக்குமதி-ஏற்றுமதி வங்கி ஆகியவற்றுடன், கடன் பரிவர்த்தனைகள் தொடர்பான கொள்கை ஒப்பந்தங்களில் இலங்கை கைசாத்திட்டமை, இலங்கையை கடன் நிலைத்தன்மையை நோக்கி நகர்த்துவதில் ஒரு முக்கிய மைல்கல் முயற்சியாகும். அடுத்த கட்டமாக உத்தியோகபூர்வ கடன் வழங்குனர்களுடான ஒப்பந் தங்களை இறுதிசெய்வதும், மேலதிக தனியார் கடன் வழங்குனர்களுடான வேலைத்திட்டங்களை உரிய நியதிகளுக்கு அமைவாக ஒப்பந்தம் செய்துகொள்வது தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகும். இதனால் இலங்கையின் இடைக்கால கடன் நிலைத்தன்மையை சுமூகமாக மாற்றியமைக்க உதவும்.

நிர்வாகம் தொடர்பில் அண்மையில் இலங்கை அறிமுகப்படுத்திய செயற்பாட்டுத் திட்டம் முக்கியமான முயற்சியாகும். மோசடி செயற்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், பொருளாதாரம் தொடர்பான நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புதற்கும், வலுவானதும் அனைத்தையும் உள்ளடக்கியதான பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்வதற்குமான நிலையான முயற்சிகளும் அவசியப்படுகிறது.

நுவரெலியாவில் உள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர் களைச் சந்தித்த சர்வதேச நாணய நிதியக் குழுவினர் இலங்கையில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சில சவால்கள் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றுக்கொண்டனர். ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாப்பதற்கான 'அஸ்வெசும' போன்ற சமூக பாதுகாப்பு திட்டங்களின் இலக்குகள் முக்கிய மானவை. அத்தோடு அவற்றை விஸ்தரிப்பதற்கான முயற்சிகளும் தேவைப்படுகிறன.

சர்வதேச நாணய நிதியத்தின் இந்தக் குழு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி பி. நந்தலால் வீரசிங்க, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி யுமான சாகல ரத்நாயக்க, திறைசேரியின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறிவர்தன, ஆளும் தரப்பு மற்றும் மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தனியார் துறை பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்தி பங்குதாரர்களும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். இலங்கை அதிகாரிகளின் சிறந்த ஒத்துழைப்புக்கு நன்றி கூறுகிறோம்.' என்று அந்த அறிக்கையில்

## தமிழ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை உள்ளிட்டவை உள்ளன.

காணிவிடுவிப்பு நடவடிக்கைகளை நாம் வரவேற்கும் அதேநேரம், தொல்லியல் திணைக்களம், வனவளத்திணைக்களங்கள் ஊடாக தமிழ் மக்களின் காணிகளை மீள கையகப்படுத்தும் நடவடிக்கைகளை நாம் கண்டிக்கிறோம்.

அதேவேளை கடந்த 29 ஆண்டு காலமாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் 12 பேரையும் விரைந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கடந்த 29 ஆண்டு காலமாக சிறைகளில் கொடூர தண்டனைகளை அனுபவித்துவரும் 12 தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவித்து, அவர்களை தமது உறவுகளுடன் சேர்ந்து வாழ அனுமதிக்க வேண்டும்.

மிக முக்கியமாக அவர்களை உயிருடன் மீள உறவுகளிடம் கையளிக்க வேண்டும். அண்மை யில்கூட இந்திய சிறையில் இருந்து விடுதலையான சாந்தன் அண்ணா இலங்கைக்கு உயிருடன் மீள வரவில்லை. அரசியல் கைதிகளை உயிருடன் உறவுகளிடம் ஒப்படைக் கவேண்டும்.

அதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன் ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்திருந்தபோது சத்திய லீலா எனும் தமிழ் அரசியல் கைதிக்கு வழங்கப்பட்ட தண்டனை குறைவு என மேன் முறையீடு செய்யப்பட்டு, மேன் முறையீட்டு விசாரணைகளில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்ட வேண்டும் என கோரி இருந்தோம். அவ்வேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உடன் இருந்தார்.

தாம் அது தொடர்பில் கவனத்தில் எடுப்பதாகவும், அமைச்சர் தான் அவரை மன்னித்துவிட்டதாகவும் கூறியிருந்தார். எனவே சத்திய லீலாவிற்கு பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என கோருகிறோம்.

யாழ். வரும் ஜனாதிபதி அரசியல் கைதிகள் விடுதலை எனும் நல்ல செய்தியுடன் வருவார் என எதிர்பார்க்கிறேன் என தெரிவித்தார்.

## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப் படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள் ளன.

இரத்மலானை, குளியாப்பிட்டிய, படங்கல, அனுராதபுரம், மாத்தறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழ கல்லூரிகளில் 24 பாடநெறிகளில் சுமார் 2500 மாணவர்கள் கற்கின்றனர். எச்.என்.டி, என்.வி.கியூ 6 தகுதிகளைப் பெற்று பட்டப்படிப்பை எதிர்பார்க்கின்றனர்.

எச்.என்.டி. மற்றும் என்.வி.கியூ. இரண்டும் ஒன்றாக விளம்பரப் படுத்தப்பட்டுள்ளன. 2015, 2016, 2017 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு இவ்வாறு செயல்படுத்தி, 2018 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு இவ்வாறு செயல்படுத்தாமல்விட முடியாது என்றார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் சுசில் மேலும் தெரிவித்ததாவது:

எமது மாணவர்கள் வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புகள் பெற்றுச் செல்லும்போது உயர் தேசிய டிப்ளோமாவுடன் சென்றாலும் அங்கு அவர்களுக்கு உரிய தொழில், சம்பளம் கிடைப்பதில்லை. எனினும் வேறு நாட்டவர்கள் இரண்டு வருடத்தில் எடுத்துக்கொண்ட பட்டப்படிப்பு சான்றிதலுடன் அங்கு வருகின்றனர். அவர்களுக்கு சிறந்த சம்பளம் வழங்கப்படுகிறது.

குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு சிவில், மெக்கேனிக்கல் போன்ற துறைகளுக்கு செல்லும்போது பொறியியலாளருக்கு உள்ள திறமை, ஆற்றல் நம்மவர்களுக்கு உள்ளபோதும் பட்டப்படிப்பு அதற்குத் தடையாக உள்ளது. இவற்றை கவனத்திற் கொண்டே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதனால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நாம் ஐ.எஸ்.எல். மற்றும் தொழில் நுட்பவியலாளர் நிறுவனம் உட்பட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி இறுதி தீர்மானமும் எடுதுள்ளோம். அந்த வகையில் எதிர்காலத்தில் இந்த பாடங்களுக்கு இணைத்துக் கொள்வோருக்கு பட்டப்படிப்பு வரை செல்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும்.

சிட்னி எக்கோட் மட்டத்தில் இதனை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் யுனிவர் டெக் நிறுவனம் மற்றும் சிலியட் நிறுவனத்திற்கும் அது தொடர்பில் நான் அறிவித்துள்ளேன். இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள முறையில் எச்.என்.டி. உடன் இணைந்து அவர்களுக்கு என்.வி.கியூ -6 வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நான் அறிவித்துள்ளேன் என்றார்.

## சபாநாயகருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிராக 117 வாக்குகள் அளிக்கப்பட்டன.

நாடாளுமன்றத்தில் அண்மையில் அனுமதிக்கப்பட்ட நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை மீறி சபாநாயகரினால் நிறை வேற்றப்பட்டமை, பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் அரசியலமைப்பை மீறி சபாநாயகர் செயற்பட்டமை ஆகிய இரு பிரதான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்ற பிரதிப் பொதுச் செயலாளர் ஷமிந்த குலரத்னவிடம் மார்ச் 5 கையளித்தன.

சபாநாயகருக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி, தமிழ் தேசியக்கூட்டமைப்பு, ஜே .வி.பி. ஆகிய கட்சிகளை பிரதிநிதித் துவப்படுத்தி 44 உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருந்தனர்.

இதனையடுத்து ஒழுங்குப்பத் திரத்தில் சபாநாயகருக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை உள்வாங்கப்பட்டதுடன் மார்ச் 19, 20 ஆம் திகதிகளில் விவாதத்திற்கு எடுப்பதென கட்சித்தலைவர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு கடந்த 19 ஆம் திகதி விவாதத்திற்கு எடுக்கப்பட்ட நிலையில் மீண்டும் கூடிய கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் மேலும் ஒரு நாளை வழங்கி 21 ஆம் திகதியும் விவாதத்தை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் மார்ச் 19 முதல் 21 வரை விவாதம் இடம்பெற்ற நிலையில் மாலை 4,30 மணிக்கு விவாதம் முடிவுக்கு வந்தது.

தொடர்ந்து பிரேரணை மீது வாக்கெடுப்பை எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி.யினால் வாக்கெடுப்பு கோரிய நிலையில் சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ வாக்கெடுப்புக்காக கோரம் மணியை ஒலிக்கவிடுமாறு உத்தரவிட்டார். அதன பிரகாரம் மாலை 4.40 மணியளவில் இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இந்த வாக்கெடுப்பின் போது பிரேரணைக்கு ஆதரவாக எதிர் கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணி, தமிழ் தேசியக்கூட்டமைப்பு, ஜே .வி.பி.. தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் ஆதரவாக வாக்களித்தனர். முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சபையில் இருக்கவில்லை.

அதேவேளை நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக அரசுடன் இனணந்து எதிரணி பக்கத்தில் சுயாதீனமாக செயற்படும் ஏ.எல்.எம். அதாவுல்லா. துமிந்த திசாநாயக்க, நிமல் லான்ஸா, உள்ளிட்டவர்கள் வாக்களித்தனர். ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த ஏ.எச்.எம். பௌசி, வடிவேல் சுரேஷ் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் ஆகியோரும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

இந்நிலையிலேயே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 42 மேலதிக வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டது.

இதேவேளை, சிறைப்படுத்தப் பட்டிருக்கும் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றாத போதும் அவர் வாக்களிப்பில் கலந்துகொண்டு பிரேரணைக்கு எதிராக வாக்களித்திருந்தார்.

அதேவேளை, நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கட்சித் தலைவர்களான அநுரகுமார திஸாநாயக்க, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட 33 பேர் கலந்துகொண்டிருக்கவில்லை.

## எந்த தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடலின் போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கலந்துரையாடிய அதிதிகள் விசேடமாக வரித்திட்டத்தை டிஜிடல் மயப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பாக நிறைவேற்றுப் பணிப்பாளர் கிருஷ்ணமூர்த்தி அவதானம் செலுத்தியதுடன் இராஜாங்க அமைச்சர் பல்வேறு கொள்கைத் தீர்மானங்களால் நான்கு இலட்சம் வரை குறைந்த வருமானம் வரிக் கோவையின் தொகை ஒரு மில்லியன் வரை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் மொட்டுக் கட்சி சரியான நேரத்தில் சரியான முடிவை எடுக்குமாம்

## அமைச்சர் பிரசன்ன மொட்டுக் கட்சி அலுவலகத்தில் தெரிவிப்பு

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் மொட்டுக் கட்சி சரியான நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுக்கும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எப்போதும் சரியான தீர்மானத்தை எடுக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பத்தரமுல்லை, நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அலுவலகத்தில் புதன்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளும் அதற்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அளித்த பதில்களும் வருமாறு -

கேள்வி: இன்றைய நிலை என்ன?

பதில்: நல்ல நிலையில் செல்கிறது.

கேள்வி: நீங்கள் யார் பக்கம்? ஜனாதிபதியின் பக்கமா? மொட்டின் பக்கமா?

பதில்: ஜனாதிபதியும் மொட்டுக் கட்சியுடன் இருக்கிறார். நாங்கள் யாருடைய பக்கமும் எடுப்பதில்லை. நாம் அனைவரும் ஒரே பக்கம்.

கேள்வி: அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் அவர் முன்னிறுத்தப்படுவாரா?

பதில்: அதை கட்சி தீர்மானிக்கும்.

கேள்வி: முடிவு எடுக்கப்பட்டுள்ளதா?

பதில்: அதை முன்னோக்கி கொண்டு செல்வோம்.

கேள்வி: ஜனாதிபதி சொல்லித்தான் தீர்மானம் எடுப்பீர்களா?

பதில்: கட்சி முடிவெடுக்கும் போது தெரியும்.

கேள்வி: பஸில் நாட்டில் இருந்து வந்திருக்கிறார் தானே. பஸில் அண்மையில் கூறினார் தானே ரணில் விக்கிரமசிங்க என்று. அந்தக் கதை உண்மைதானே.

பதில்: எனக்குத் தெரியாது. பஸில் உள்ளே இருக்கிறார் போய் கேளுங்கள்.

கேள்வி: அவர் முகம் கொடுக்கவில்லை

பதில்: மொட்டுக் கட்சி எப்பொழுதும் சரியானதற்கே நிற்கும். சரியான விடயத்திற்காக உழைக்கும். எதிர்காலத்தில் சரியான விடயங்கள் நடக்கும். (05)

# மூதூர் பொலிஸ் நிலையத்தால் விசேட இப்தார் தின நிகழ்வு







மூதூர் பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட இப்தார் நிகழ்வு மூதூர் பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண (முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர்) கலந்து சிறப்பித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் முற்படைகளின் தளபதிகளும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களும், மாவட்டத்தின் சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும்கலந்து கொண் டனர்.

அத்துடன் மாவட்டத்தின் சகல பொலிஸ் நிலையத்தின் முஸ்லிம் பொலிஸ் அதிகாரிகள், உத்தியோ கத்தர்களும் கலந்து கொண்டனர். (05)

# மத்ரஸா மாணவனின் மர்ம இறப்பு மௌலவிக்கு விளக்கமறியல் நீடிப்பு




(பாறுக் ஷிஹான்)

மாணவனின் மர்ம மரணம் தொடர்பில் சந்தேக நபரான மௌலவியை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு புதன்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் மௌலவி உட்பட சிசிடிவி காணொளிகளை அழித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலையாகிய 4 சந்தேக நபர்களும் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன் போது கடந்த தவணைகளில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிசிடிவி காட்சி உள்ளடங்கிய முக்கிய தடயப்பொருள்களை அழித்த குற்றச்சாட்டு அடிப்படையில் கைதான 4 சந்தேக நபர்களை கடும் நிபந்தனையின் கீழ் பிணையில் விடுதலை செய்யப்பட்ட நிலையில் புதன்கிழமை மன்றில் ஆஜராகி இருந்தனர். பின்னர் இரு தரப்பினரின் வாதப்பிரதிவாதங்களின் பின்னர் சந்தேக நபரான மௌலவியை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த சம்பவத்தில் கடந்த தவணையின்போது 30,26, 22, 23, வயது மதிக்கத்தக்க 4 சந்தேக நபர்களை பிணையில் விடுவித்தல் தொடர்பாக சமர்ப்பணம் மற்றும் குறித்த வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி உட்பட ஏனைய தரப்பினரின் விடயங்களை ஆராய்ந்த நீதிவான் நீண்ட சமர்ப்பணத்தின் பின்னர் மத்ரஸா பாடசாலை மாணவனின் மர்ம உயிரிழப்பு தொடர்பில் சிசிடிவி காட்சி உள்ளடங்கிய முக்கிய தடயப்பொருள்களை அழித்த குற்றச்சாட்டு அடிப்படையில் கைதான 4 சந்தேக நபர்களை தலா 10 லட்சம் ரூபா சரீர பிணை ,மாதம் இறுதியில் வரும் ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடுதல், வெளிநாட்டு பயணத்தடை, கடவுச்சீட்டு நீதிமன்றில் பாரப்படுத்தல், குறித்த வழக்கு தவணைகளில் தவறாது ஆஜராகுதல், உள்ளிட்ட பிணை நிபந்தனை விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

மேலும் மற்றுமொரு சந்தேக நபரான மௌலவிக்கு விளக்கமறியல் நீடிக்கபட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 03 திகதி வரை வழக்கை ஒத்திவைக்குமாறு கல்முனை நீதிவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# அட்டாளைச்சேனை மஸ்ஜிதுல் மினன் பள்ளிவாசலுக்கு அமீர் ஏ.கே. உதவி



(கே எ ஹமீட்)

அட்டாளைச்சேனை அமைந்துள்ள மஸ்ஜிதுல் மினன் பள்ளிவாசலின் கட்டுமான பணிகளுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் தொழிலதிபர் ஏகே அமீர் ஒரு தொகுதி சீமெந்துகளை வழங்கியுள்ளார்.

அமைப்பாளர் ஏகே அமீர் கட்சியின் மத்திய குழு தலைவர் ஹம்ஸா சனூஸ் ஆகியோர் பள்ளிவாசலுக்கு விஜயம் மேற்கொண்டு அங்கு நடைபெறும்



கட்டட நிர்மாணப் பணிகளைப் பார்வையிட்டார். (05)

# சுத்தமான குடி தண்ணீர் பெற முடியாது நோயாளர்கள் அவதி



தருமபுரம் வைத்திய சாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் மற்றும் விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுபவர்கள் குடிநீரின்றி மிகவும் சிரமப்படுகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

குடிநீர் பெறுவதாயின் அயலில் உள்ள தனியார் வர்த்தக நிலையம் அல்லது அயலில் உள்ள வைத்தியர் விடுதி பகுதிகளில் உள்ள கிணற்றிலே தாம் குடிநீர் பெறுகின்றனர் எனவும் இதன் காரணமாக சில நோயாளர்கள் உதவியாளர்கள் இன்றி சிகிச்சைக்காக சேர்க்கப்படுபவர்கள் குடிநீர் இன்றி கடும் சிரமப்படுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் நோயாளர்களின் நலன் கருதி சுத்தமான குடிநீர் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நோயாளர்கள் தெரிவித்துள்ளனர். (05 -113)

# கிழக்கு மாகாண அபிவிருத்திகள் நல்லிணக்கம் குறித்து செந்தில் தொண்டமானுடன் தூதர்கள் கலந்துரையாடல்



சுவிட்ஸர்லாந்து, ஜப்பான் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு மரியாதை நிமித்தமாக வருகை தந்து மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நல்லிணக்கம் குறித்து ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கலந்துரையாடல் நடத்தினர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்கு ஆதரவளிப்பதாகவும் தூதுவர்கள் ஆளுநரிடம் இணக்கம் வெளியிட்டனர்.

(05)




# காதல் போற்றும் பங்குனித்திருநாள் வசந்தவிழா

பிப்ரவரி 14 என்பது வெலன்டைன் என்ற கிறிஸ்தவப் பாதிரியாரால் நடைமுறைப்படுத்தப்பட்ட காதலர் தினம் என்பதும் , இந்நாள் பல்வேறு எதிர்ப்புகளுக்கு இடையிலும் பரபரப்பாகக் கொண்டாடப்பட்டுதான் வருகிறது என்பதும்



நமக்குத் தெரிந்த விடயங்களே. ஆனால், இவ்வாறு காதலர் தினம் என்று ஒன்றைக் கொண்டாடுவதற்கு நமது வரலாற்றில் முன்னுதாரணங்கள் உண்டா என்று ஆராய்ந்தால் எத்தனையோ விடயங்களில் நம் நாடும் சமூகமும் முன்னுதாரணங்களாக இருந்திருப்பது போன்றே இந்த விடயத்திலும் முன்னுதாரணமாக இருந்துள்ளன எனத் தெரியவருகிறது.

**காமன் பண்டிகை**

அகநானூற்றில் 'பங்குனி முயக்கம்', 'கொங்கர் மணி அரையாத்து மறுகின் ஆடும் உள்ளி விழவு' (பா 368) என்றும், கலித்தொகையில் 'மல்கிய துருத்தியுள் மகிழ் துணைப் புணர்ந்து... விளையாடும் வில்லவன் விழவு' (35:13-14)

என்றும் குறிப்பிடப்படுகின்ற காமன் பண்டிகையே சங்ககாலக் காதலர் தினம் எனத் தெரியவருகிறது.

நாம் மேலே கண்ட கலித்தொகைக் குறிப்பு கி.பி. 4 அல்லது 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குறிப்பாகலாம். கலித்தொகையில் இடம்பெற்றுள்ள வேறொரு பாடலில்

(27:24-26) 'நாம் இல்லாப் புலம்பாயின் நடுக்கம் செய் பொழுதாயின் காமவேள்

விழவாயின் கலங்குவள் பெரிதென ஏமுறுகடுந்திண்டேர் கடவி நாம் அமர் காதலர் துணை தந்தார் விரைந்தே' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தம்மை நன்கு அலங்கரித்துக்கொண்ட பெண்டிர் குழுக்களாகக் கூடி வையையாற்றின் மணல் திட்டுகளில் விளையாடுவர் என்ற குறிப்பும் இப்பாடலில் (வரி 19-20) இடம்பெற்றுள்ளது. இது பங்குனி மாதம் உத்தர பால்குன நட்சத்திர நாளில் நிகழ்ந்தது. பங்குனி என்ற மாதப் பெயரே பால்குனி என்ற பெயரின் திரிபாகும். பனிக்காலத்தின் இறுதிக் கட்டத்தைக் குறிப்பதாகவும், இளவேனில் பருவத்தை வரவேற்கின்ற முன்னறிவிப்பாகவும் இந்நாள் திகழ்ந்தது. அகநானூற்றில்'கொங்கர் மணி அரையாத்து மறுகின் ஆடும் உள்ளி விழவு'என்று குறிப்பிடப்பட்டுள்ளதைக் கண்டோம். கொங்கு நாட்டில் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது எனத் தெரிகிறது.

**ஹொலிப்பண்டிகை**

இறையனார் களவியல் நூற்பா உரையில் 'கருவூர் உள்ளிவிழாவே' என்ற குறிப்புகாணப்படுகிறது. ஊளி விழவு என்பது பிரதியெடுப்போரால் உள்ளி விழவு என்று தவறாக எழுதப்பட்டிருக்கவும் வாய்ப்புண்டு. ஊளி என்ற சொல் பேரோசை என்ற பொருளில் நம்பிள்ளையின் 'ஈடு' முப்பத்தாறாயிரப்படி ஏழாம் பத்தில் இடம்பெற்றுள்ளது. உளை, ஊளை என்ற சொல் வழக்குகளையும் இதனோடு



தொடர்புபடுத்தலாம். சமஸ்கிருதத்தில் ஹூல ஹூலி என்ற சொல் மகளிர் மகிழ்ச்சியில் எழுப்பும் பொருளற்ற ஓசை எனப் பொருள்படும். சமஸ்கிருதத்தில் ஹூல ஹூலி என்ற சொல் மகளிர் மகிழ்ச்சியில் எழுப்பும்

பொருளற்ற ஓசை எனப் பொருள்படும். இந்த அடிப்படையிலேயே காமன் பண்டிகை என்பது வட இந்தியாவில் ஹோலகா ஹோலிகா என்றும் ஹ்ளா ஹ்ளி என்றும் அழைக்கப்பட்டது.

இவ்விழா நாளில் ஆடவரும் பெண்டிரும், குறிப்பாக இளைஞர்கள் ஒருவர் மேல் ஒருவர் சாய நீரைத் தெளித்துக்கொண்டும், சாயப் பொடிகளை தூவிக்கொண்டும்,

மதுபானம் அருந்தி ஊளையிட்டுக்கொண்டும் குதித்துக்கொண்டும் சில வேளைகளில் இருபொருள்படும் கொச்சையான பாடல்களைப் பாடிக்கொண்டும் திரிவர். இதுவே தற்போது ஹோலி என்று வழங்கப்படுகிறது.

கொங்குநாட்டில்ஒலிஎழுப்புகின்றமணிகளைக் கோத்துஇடுப்பில்கட்டிக்கொண்டுநடுத்தெருக்களில் ஊளையிட்டுக்கொண்டும்குதித்துக்கொண்டும்சில வேளைகளில் இருபொருள்படும் கொச்சையான ஆடிப்பாடிக்கொண்டு இவ்விழாவைக் கொண்டாடினர். உறையூரிலும், திருவரங்கத்திலும் ஆற்றின் இடையே இருந்த மணல் திட்டுகளில் ஆடவரும் பெண்டிரும் தமக்கு விருப்பமான இணைகளுடன் சேர்ந்துகொண்டு கூடிக் களிப்பது சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காதலுக்கு அங்கீகாரம் கிடைத்திருக்குமா..?

நிலப்பிரபுத்துவப் படிநிலைச் சமூக அமைப்பில் இத்தகைய உறவுகள் நிகழ்வதற்கான சாத்தியக்கூறுகள் மிகக் குறைவே. சாதி சனம் என்று இன்று சொல்கின்ற ரத்த உறவுக் குலக் குழுக்களிடையிலும், கிராம சமூக அமைப்புக்குள்ளும்தான் இத்தகைய களியாட்டங்கள் நிகழ்ந்தன என்றே கருதவேண்டியிருக்கிறது.

குடும்பம் என்ற அமைப்பிற்கு முற்பட்ட இரத்த உறவுக் குழுச் சமூகத்தில் நிலவிய பாலுறவு முறைகள் மாற்றமடைந்துவிட்ட பின்னரும்பழையமரபுகளைஒருசடங்குபோலக்கடைபிடிக்கும் வழக்கத்தின் அடையாளமாகவும் ஆண்டுக்கு ஒருமுறை நிகழும் அடையாளக் குறியீட்டு விழாவாகவும், கிராம சமூக அமைப்புகள் கூடி அச்சமூக உறுப்பினர்களான இளைஞர்கள் தமக்குரிய இணையைத் தாமே தேர்ந்துகொள்ளும் வாய்ப்பை உருவாக்கும் நிகழ்வாகவும் இது நீடித்து வந்திருக்கலாம். எனவே, கலித்தொகை குறிப்பிடுகின்ற காமவேள் விழவு என்பது உள்ளி விழவு அல்லது ஊளி விழவேயாயினும் அகநானூற்றில் குறிப்பிடும் விழாவும் கலித்தொகையில் குறிப்பிடப்படும் விழாவும் தன்மையளவில் மிகப் பெரும் வேறுபாடுகள் உடையவை என்பதில் ஐயமில்லை.

காந்தர்வம் என வைதிக மரபில் குறிப்பிடப்படுகின்ற திருமண முறை எந்தவித நிர்ப்பந்தமும் பொய்மையும் பாசாங்குகளுமற்ற உறவு முறையாகும். உத்தரகுரு என்றும் போகபூமி என்றும் புராணங்களில் குறிப்பிடப்படும் நாட்டில் இத்தகையஉறவுமுறை இருந்தது எனத்தெரியவருகிறது. தமிழ் மரபில் களவு மணம் எனக் குறிப்பிடப்படுவதை வைதிக மரபில் நிலவிய காந்தர்வ மணத்தோடு ஒப்பிடுவதுண்டு. களவு என்ற சொல்லே கள்ளத்தனமாக, பிறர் அறியாமல் மேற்கொள்ளப்படும் காதல் ஒழுக்கம் எனப் பொருள்படும். களவு மணமே தமிழ் நெறி என்று கூறும் அளவிற்குக் களவு மணத்திற்குச் சங்கப் புலவர்களிடையே குறிப்பிடத்தக்க அங்கீகாரம் கிட்டியிருந்தது.

ஆனால், சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள ஒரு குறிப்பு காமவேள் கோட்டம் தமிழகத்தில் பிரபலமாக இருந்துள்ளது என்பதற்குச் சான்றாகத் திகழ்கிறது.

திருவெண்காட்டிலிருந்த சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய நீர்த்துறைகளில் நீராடிக் காமவேள் கோட்டத்தில் தொழுகின்ற பெண்டிர் மறுபிறப்பில்

போகபூமியில்பிறப்பர்என்றநம்பிக்கைபொதுமக்களிடையே நிலவிற்று என்றும் சிலப்பதிகாரத்தால் (1:9:57-64) தெரியவருகின்றன. காமன் பண்டிகை என்பது இளவேனில் பருவத்தைவரவேற்கின்றஒன்றாகஅமைந்ததாகும். பின்பனிக் காலம் முடிந்து இளவேனிற் பருவம் தொடங்குவதற்கு அறிகுறியாகப் பங்குனி மாதத்தின் இறுதியில் அல்லது சித்திரை மாதத் தொடக்கத்தில் வசந்த விழா என்ற பெயரில் இவ்விழாவைக் கொண்டாடுவதும் பல பகுதிகளிலும் வழக்கமாக உள்ளது.

**வசந்தன் வரும் காலம்...**

வசந்தம் என்ற சொல்லிலிருந்து தோன்றிய வாசந்த, வாசந்தி என்ற சொற்களுக்கு இனிமை, இளமை, குயில், தென்றல், காதல் பேச்சு என்றெல்லாம் பல பொருள்கள் உண்டு. 'வாசந்தி பேசி மணம் புணர்ந்து' எனத் திருமூலர் தம்

திருமந்திரத்தில் குறிப்பிடுகிறார். வசந்த காலம் என்பது காதலுக்குரியபருவமாதலால்தான்இத்தகையகாதல்தொடர்பான சொல்லாட்சிகள் மக்கள் வழக்கில் நிலைத்துவந்துள்ளன. வசந்தன் என்ற பெயர் மன்மதனுக்குரியதாகும்.

'சித்திரை வசந்தன் வரு செவ்வியுடன்' என்று வில்லிபுத்தூராரின்மகாபாரதத்தில் ஒரு குறிப்பு உள்ளது. பனிக்காலத்தின் முடிவும் வசந்த காலத்தின் தொடக்கமுமே மன்மதனுக்குரிய காலமாகக் கருதிக் கொண்டாடப்பட்டன என்பது இதனால் தெரியவருகிறது.

ஊளிவிழாஅல்லதுஹோளிவிழாஎன்பதுசாஸ்திரங்களால் அங்கீகரிக்கப்படாத ஒன்று என்றும், உயர்ந்தோரான மூதாதையர்களால் கொண்டாடப்பட்ட விழா என்பதால் (சாஸ்திரத்தால் அன்றி சிஷ்டாசாரத்தால்) பின்பற்றத்தக்கதே என்றும் இத்தகைய முன்னுதாரணத்தை'ஹோளா அதிகரண நியாயம்' என்று குறிப்பிட்டனர் என்றும் தெரியவருகின்றன.

**சமயநூல்கள் போற்றும் பங்குனி உத்தரம்**

காமனுக்கு அனங்கன் என்றும் பெயருண்டு. சிவன் தவம் செய்துகொண்டிருந்தபோது, அத்தவத்தைக் கலைப்பதற்காகச் சிவன்மீது காதல் உணர்வுகளை ஏற்படுத்தும் கணைகளை மன்மதன் தொடுத்தமையால் தவம் கலைந்த சிவனுடைய நெற்றிக்கண்ணின் கதிர்வீச்சுக்குக் காமன் பலியானான். அதனால் அவனுக்கு அங்கம் (உடல்) இல்லாதவன் என்று பெயர் வந்ததாக விளக்கம் கூறப்படுகிறது.

கச்சியப்பசிவாச்சார்யாரின் கந்தபுராணத்திலும், காளிதாசனின் குமாரசம்பவத்திலும், இந்த விளக்கத்திற்கு ஆதாரமாக அமைந்துள்ளது.

தமிழ் இலக்கியங்களில் உருவிலி என்ற பெயரால் மன்மதன் குறிப்பிடப்பட்டுள்ளான். காதல் உணர்வு என்பது எவ்வாறு இருபாலார் மனதிலும் விதைக்கப்பட்டு வேர்பிடித்து வளர்கிறது என்பது எளிதில் கணித்துச் சொல்லமுடியாத ஒன்றாக இருப்பதாலும் இத்தகைய உணர்வுக்குக் காரணமான தெய்வத் தத்துவத்தை உருவிலி என்றும் அனங்கன் என்றும் குறிப்பிட்டிருக்கக்கூடும்.

**மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்**
**கலிவிழாக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்**
**ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்.**

என்ற திருஞானசம்பந்தப்பெருமானின் பங்குனி உத்தரம் குறித்த தேவாரம் பிரபல்யமானது..

செறி புன் சடையார் திருவாரூர்ப் திருப் பங்குனி உத்தரத் திருநாள் குறுக வரலும் பரவையார் கொடைக்கு விழாவில் குறைவறுக்க

நிறையும் பொன் கொண்டு அணைவதற்கு நினைந்து நம்பி திருப்புகலூர் இறைவர் பாதம் பணிய எழுந்து அருளிச் சென்று அங்கு எய்தினார்

அக்காலத்தில் திருவாரூர் போன்ற திருத்தலங்களில் பங்குனி உத்தரப்பெருவிழா சிறப்பாக நடந்தமையை மேற்சொன்ன பெரியபுராணப்பாடல் போன்றவையும் அழகாக படம் பிடித்துக்காட்டுகிறது..

மேலும் பங்குனி உத்தரம் சுவாமி கல்யாண நாள் என்ற வழக்கும் பரவலாக உண்டு. அன்று பல்வேறு கோயில்களிலும் திருக்கல்யாண உத்ஸவம் நடைபெறுகிறது.

**தியாக. மயூரகிரிக்குருக்கள்**

## தேவாரம்

பாடல் எண் : 1 பண் : பஞ்சமம்

**ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே**
**உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே**
**தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே**
**சித்தத்துள் தித்திக்குந் தேனே**
**அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே**
**அம்பலம் ஆடரங் காக**
**வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்**
**தொண்டனேன் விளம்புமா விளம்பே**

பொழிப்புரை:

இயற்கையான ஒளி நாளும் வளருகின்ற விளக்கு ஆனவனே! என்றும் அழிதல் இல்லாத ஒப்பற்ற பொருளே! உயிரினது அறிவைக் கடந்த ஒப்பற்ற ஞான வடிவினனே! தூய்மை மிக்க பளிங்கின் குவியலாகிய அழகிய மலையே! அடியவர் உள்ளத்தில் இனிமைதரும் தேனே! பொதுவான எல்லையைக் கடந்து இறைவனிடம் ஈடுபட்டு இருக்கும் உள்ளத்தில் பேரின்பம் நல்கும் கனியாக உள்ளவனே! பொன்னம் பலத்தைத் தன் கூத்தினை நிகழ்த்தும் அரங்கமாகக் கொண்டு அடியவருடைய காட்சிக்குப் புலனாகும் அருள் நடனத்தை விரும்பி நிகழ்த்தும் உன்னை, உன் தொண்டனாகிய நான் புகழுமாறு நீ திருஉள்ளம்பற்றிச் செயற்படுவாயாக.

# கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீள்குடியேற்ற கிராமங்களில் வீடுகள் அமைப்பு





கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீள் குடியேற்ற கிராமங்களில் வீடு அமைப்பு திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது வீடமைப்புத் திட்டத்தின் நிலைப்பாடு என்ன என்பதை பற்றி அறிந்து கொள்வதற்காக விஜயம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மேற்படி மீள்குடியேற்ற அமைச்சால் உப்பாறு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைக்கப்பட்டு வருகின்ற வீடமைப்பு திட்டத்தின் தற்போதய நிலைமைகள் மற்றும் முன்னேற்றங்கள், பிரச்சினைகள் சம்பந்தமாக கிண்ணியா பிரதேச செயலாளர் விஜயம் மேற்கொண்டார்.

விஜயத்தின் போது பிரதி திட்டமிடல் பணிப்பாளர், தொழிநுட்ப உத்தியோகத்தர், பிரிவிற்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் சகிதம் கள விஜயத்தினூடாக நேரில் சென்று பயனாளிகளுடன் கலந்தாலோசனை செய்யப்பட்டன. (05)

# நாவாந்துறையில் உணவகத்திற்கு 2 லட்சம் ரூபாய் தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம் நாவாந்துறை பகுதியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு 2 லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதார பரிசோதகர்களால் நாவாந்துறை பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது, பழுதடைந்த உணவுகள், இறைச்சி கறிகள் என்பன மீட்கப்பட்டதுடன், சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையிலான சூழல்கள் அவதானிக்கப்பட்டது.

அதனை அடுத்து உரிமையாளருக்கு எதிராக யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றில் பொது சுகாதார பரிசோதகர்களால் 20 குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குற்றச்சாட்டுக்களை உரிமையாளர் ஏற்றுக்கொண்டதை அடுத்து, ஒவ்வொரு குற்றத்திற்கும் 10 ஆயிரம் ரூபா வீதம், 20 குற்றச்சாட்டுக்களுக்கு 2 லட்ச ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (05)

# நாட்டில் வாய்புற்று நோயால் தினசரி 3 இறப்புக்கள் பதிவு

வாய்புற்றுநோய் பாதிப்பால் தினசரி 3 மரணங்கள் பதிவாகுகின்றன என சுகாதாரதிணைக்களம் தெரிவித்துள்ளது.

வெற்றிலை, புகையிலை உள்ளிட்டவற்றை பயன்படுத்துவதன் காரணமாக பெரும்பாலான இளைஞர்கள் வாய் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என இலங்கை பல் மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

வாய்புற்றுநோய் பாதிப்பு காரணமாக இருதயநோய் மற்றும் நிமோனியா உள்ளிட்ட நோய்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

மார்ச் மாதம் 20 ஆம் திகதி வாய் புற்றுநோய் தினமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வாய் புற்றுநோய் பாதிப்பு காரணமாக தினசரி 6 நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் எனவும் தெரியவந்துள்ளது. (05)

# திருகோணமலை மேன்காமம் குளம் ஆக்கிரமிப்பு : சட்டநடவடிக்கை எடுக்கக்கோரும் கிராம மக்கள்

திருகோணமலை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மேன்காமம் குளத்தின் பகுதிகளை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிலர் புதன்கிழமை முதல் மீண்டும் ஆக்கிரமித்து வருவதாகவும், கனரக வாகனங்களை பயன்படுத்தி குளத்தின் பகுதிகளை சேதப்படுத்தி அங்கிருக்கும் நீரை வெளியேற்றி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை அவர்களுக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இதனால் அக்குளத்தை நம்பி விவசாயத்தில் ஈடுபடும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் கவலை வெளியிடுகின்றனர்.

அபிராமி அம்மன் விவசாய சம்மேளனத்திற்குட்பட்ட மேன்காமம் குளத்தை நம்பி 200 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் 400 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொண்டுவருகின்றார்கள். ஆனால் இக்குளமானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாமலும், பெரும்பான்மை இனத்தவர்களால் கையகப்படுத்தப்பட்டும் வருகின்றது. இதனால் இக்குளத்தை நம்பி விவசாயத்தை வாழ்வாதாரத் தொழிலாக மேற்கொண்டுவரும் மக்கள் காலாகாலமாக விவசாயத்தில் நட்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் தெரிவிக்கின்றார்கள்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குளத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு குளத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வருகின்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு குளத்தைப் பாதுகாக்க உதவுமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (05)

# ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவரை அச்சுறுத்தியவர்கள் மீது முறைப்பாடு



(பாறுக் ஷிஹான்)

ஐக்கிய காங்கிரஸ் கட்சி தலைவர் முபாறக் அப்துல் மஜித் தனது கட்சியில் இருந்து விலக்கப்பட்ட இருவருக்கு எதிராக முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் புத்தளம் மாவட்டத்தில் இருந்து ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் உப தலைவராக இருந்த எம்.எஸ்.எம். சப்வான் என்பவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார். இம்முறைப்பாட்டில் தனது கட்சியில் இருந்து நீக்கப்பட்ட மேற்குறித்த நபர் பின்னர் கட்சியின் பெயரை பயன்படுத்தியும் தற்போதைய செயலாளர் தான் என கூறி கட்சி தொடர்பான அறிக்கைகளை வெளியிடுவதாகவும் சமூக ஊடகங்களை பயன்படுத்தி ஐக்கிய காங்கிரஸ் கட்சி தலைவர் முபாறக் அப்துல் மஜித் இல்லை என கூறி தனது பெயருக்கும் கட்சிக்கும் களங்கம் ஏற்படுத்துவதாகவும் தெரிவித்து முறைப்பாடு மேற்கொண்டுள்ளார்.

மேலும் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் பிரதி தலைவராக சிறிது காலம் செயற்பட்டு பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கை ஊடாக நீக்கப்பட்ட ஏறாவூர் பகுதியை சேர்ந்த மௌலவி சி.எம். மழ்ஹர்தீன் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சில் ஐக்கிய காங்கிரஸ் கட்சி தலைவர் முபாறக் அப்துல் மஜீத் முறைப்பாடு அளித்துள்ளார். அந்த முறைப்பாட்டில் முகநூலில் தன்னை பற்றி போலியாக முகப்பக்கங்களை உருவாக்கி கட்சி நடவடிக்கைகளை சீர்குலைப்பதாகவும் தன்னையும் கட்சியை அழிப்பேன் என அச்சுறுத்துவதாகவும் அம்முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உலமா கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுவிட்டதாக போலி பேஸ்புக் ஐடீக்கள் சொல்கின்றன. எனினும் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி மரணிக்கும் வரை அவரை உலமா கட்சியின் தலைமை பதவியில் இருந்து நீக்கும் அதிகாரம் எவனுக்கும் இல்லை என அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

(05)

# வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயம்



வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்; எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, வைரபுளியங்குளம், புகையிரதநிலைய வீதியில் வியாழக்கிழமை மதியம் இவ் விபத்து இடம்பெற்றது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

வவுனியா நகரப் பகுதியில் புகையிரத நிலைய வீதி ஊடாக சென்ற ஓட்டோ கதிரேசு வீதியில் திரும்ப முற்பட்ட வேளையில் வைரவபுளியங்குளத்தில் இருந்து வவுனியா நகரம் நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதிகள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இரு வாகனங்களும் கடுமையாக சேதமடைந்துள்ளதுடன், குறித்தவிபத்து தொடர்பில் வவுனியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# நிந்தவூர் ஆதார வைத்தியசாலை ஆண்கள் விடுதி புனர்நிர்மாணம்

(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் ஆதார வைத்திய சாலையில் நீண்ட நாள்களாக பல்வேறு இட நெருக்கடிகளுக்கு மத்தியிலும் குறைந்த வசதிகளுடனும் இயங்கி வந்த ஆண்கள் விடுதி தற்பொழுது புனர்நிர்மாணம் செய்யப்பட்ட புதிய இடத்தில் இயங்கி வருகின்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ். ஆர். இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம். பி.அப்துல் வாஜித்தின் நேரடி மேற்பார்வையிலும் விடுதியின் பொறுப்புத் தாதிய உத்தியோகத்தர் திருமதி எம். வை. பாயிகாவின் நேரடி வழிகாட்டலிலும் இந்நிகழ்வு இடம் பெற்றது.

இப்புனர்நிரமாண வேலை வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் டாக்டர் எம்.என்.எம். யூசுப், வைத்தியசாலையின் பிடிஓ கே. எம்.றபீக், அல் அஸ்ரக்கியன் 98 அமைப்பின் உறுப்பினர்கள், ரெயின்போ பிரிண்டர்ஸ் உரிமையாளர், மற்றும் எம். வை. பாரிஸ், நலன்விரும்பிகள், வைத்தியர்கள், தாதியர்கள் என பல்வேறு தரப்பினரின் பொருளாதார மற்றும் சரீர உதவியுடனும் வைத்தியசாலையின் உத்தியோகத்தர், ஊழியர்களின் முழுமையான பங்களிப்புடனும் இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# வெடுக்குநாறிமலைப் பூசாரி வைத்தியசாலையில் சேர்ப்பு



வெடுக்குநாறி மலையின் பிரதான பூசாரியான தம்பிராசா மதிமுகராசா சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா வடக்கு, வெடுக்கு நாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று பொலிஸாரின் வன்முறையால் ஆலயபூசகர் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் கடந்த 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த எட்டுப்பேரையும் விடுதலைசெய்து வவுனியா நீதிமன்று செவ்வாய்க்கிழமை உத்தரவு பிறப்பித்தது.

இந்நிலையில் விடுதலையான ஆலயத்தின் பூசாரியார் சுகவீனமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் புதன்கிழமை சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி 5 நாள்கள் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# வடமராட்சி நீரேரியும் தொண்டைமானாறு தடுப்பணைக் கதவுகளின் இயக்கமும்

எந்திரி.ந.சுதாகரன்

யாழ்ப்பாணம் ஆறுகளோ மிகப்பெரிய மற்றும் நடுத்தர குளங்களோ இல்லாத மாவட்டமாக காணப்படுகின்றது. அனைத்துநீர்த்தேவைகளுக்கும்நிலத்தடிநீரேமூலாதாரமாகப் பயன்படுத்துகின்றது. அதேவேளை நிலத்தடி நீரினை மேம்படுத்தும் வகையில் சிறிய குளங்கள், நீரேரிகள் மற்றும் உவர்நீர் தடுப்பணைகள் காணப்படுகின்றன. எனினும் நிலத்தடி நீரின் தரம் மாசடைந்து காணப்படுவதுடன் அதன் அளவும் குறைவடைந்து செல்கின்றது.

நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கின்ற இன்றைய காலகட்டத்தில் நீரைப் பேணிப் பாதுகாக்க வேண்டும், நீரினைச் சேமிக்க வேண்டுமென்ற கரிசனை அனைத்துத் தரப்பினரிடமும் உருவாகியிருக்கிறது. அந்த வகையில் யாழ்ப்பாண நீர்வளங்களை மேம்படுத்தும் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு எமது திணைக்களத்தாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதில் உச்சமாக, காலநிலை மாற்றங்களினால் நீரின் அத்தியாவசியத்தை அனைவரும் உணருகின்ற தருணமாக இன்றைய சூழ்நிலைகள் அமைந்திருக்கின்றன.

அதிக வெப்பத்தை அனுபவிக்கின்ற இக்கால கட்டத்தில் நீர் நிலைகளில் நீர் ஆவியாகுதலும் மிக அதிகமாகக் காணப்படுகிறது. எனினும் எமது நீர்நிலைகளில் உச்ச கொள்ளளவுக்கு நீரினை சேமித்து வைப்பதில் மிகப்பெரிய சவால்களைஎதிர்கொள்ளவேண்டியசூழ்நிலைகள்உருவாகின. குறிப்பாக வயல்கள் அழிவதற்கும் வெள்ளப் பேரிடர்கள் ஏற்படுவதற்கும் காரணம் வடமராட்சி நீரேரியில் நீரைத் தேக்குவதும் தொண்டைமானாறு அணைக்கதவுகளின் இயக்குமும்தான் என்கிற குற்றச் சாட்டுக்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழலும், நீரேரியில் நீர் மட்டத்தை குறைத்து வைத்திருக்கும் படியான கோரிக்கைகளை செவிமடுக்க வேண்டிய சூழலும் உருவாகின.

மேற்படி விடயங்களைக் கருத்தில்கொண்டு கடந்த வருடம் தொண்டைமானாறு கதவுகளின் இயக்கம் தொடர்பான மேம்படுத்தும் நடவடிக்கையை அனைத்து பங்குதாரர்களுடன் கலந்துரையாடி மேற்கொண்டிருந்தோம். அத்துடன் நீர் தொடர்பான விழிப்புணர்வையும் மக்களுக்கு ஏற்படுத்தியிருந்தோம். அதன் பிரகாரம் கடந்த பருவகாலத்தின்போது வெற்றிகரமாக அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் மக்களும் வயல்நிலங்களும் பாதிப்புறா வண்ணமும் வடமராட்சி நீரேரியில் நீர் சேமிக்கப்பட்டும் தொண்டைமானாறு அணைக்கதவுகள் இயக்கப்பட்டும் இருந்தன.

இந்த வருட உலக நீர்தினத்தின் கருப்பொருளாகவுள்ள 'அமைதிக்காக தண்ணீரைப் பயன்படுத்தவேண்டும்' என்கிற கருத்தின் பிரகாரம் அனைத்துப் பங்குதாரர்களும் மகிழ்வாக அமைதிகொள்ளும் வகையில் எமது செயற்பாடுகள் அமைந்திருந்தன என்பதினை கூறுவதில் மகிழ்ச்சி கொள்கிறோம். வடமராட்சி நீரேரி தொடர்பாகவும் கடந்த வருட எமது வெற்றிகரமான செயற்பாடுகள் தொடர்பாகவும் இக்கட்டுரை ஆழமாகப் பேசுகிறது.

## 1.0 அறிமுகம்

தொண்டமனாற்றுப் பகுதியில் கடல் நீர் நேரடியாக வடமராட்சி நீரேரியினுள் உட்புகுவதைத் தடுத்தல், வடமராட்சி நீர் ஏரியினுள் இயலுமான அளவு மழைநீரைத் தேக்கி நிலத்தடி நீர் வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் உவர் தன்மையான வயல் நிலங்களை மீட்டெடுத்தல்; ஆகிய பிரதான நோக்கங்களையும் ஈடேற்றக்கூடிய வகையில் தொண்டமனாறு நீர்த்தடுப்புக் கதவுகள் (யழிஷஷழிஆள) உரிய முறையில் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டும் தடுப்பணைக் கதவுகள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நியமங்களுக்கும் நிலையியல் கட்டளைகளுக்கும் ஏற்றவாறே இயக்கப்பட்டும் வருகின்றன.

மழைகாலம் தொடங்கியதும் தொண்டைமானாறு தடுப்பணை, வடமராட்சி நீரேரி மற்றும் அதைச் சூழவுள்ள வயல் நிலங்கள் தொடர்பான விடயங்கள் பேசுபொருளாக எங்கும் வியாபித்துக்கொள்ளும். அந்த வகையில் கடந்த வருடம் (2022) சமூக வலைத்தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் அவை விவாதப் பொருளாகவும் மாற்றம் பெற்றிருந்தன. 'வயல்கள் அழிகின்றன', 'தடுப்பணை திறக்கவில்லை', 'தடுப்பணைக் கதவுகளை எவ்வண்ணம் செயற்படுத்தலாம்', 'தடுப்பணை தேவையில்லை/ அதன் அமைவிடம் பொருத்தமில்லை' என்கிற கருத்துரைகளும் எங்கும் உலாவிவந்ததை அனைவரும் அறிவார்கள்.

ஸ் இதன் உண்மைத்தன்மையை கண்டறிவதும் ,

ஸ் நீரேரியின் நோக்கத்தையும், அதன் செயற்படுத்தல் தொடர்பான முறைமையையும், தடுப்பணைக் கதவுகளின் இயக்கம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும்

ஸ் பொதுமக்கள் பாதிப்புறா வண்ணமும் சூழலுக்கும் சமூகத்திற்கும் மிகப்பெரிய எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தாத வகையில் தற்போதைய காலநிலை மற்றும் சூழ்நிலைக்கேற்ப தடுப்பணைக் கதவுகளின் இயக்கத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதும்

திணைக்களத்தின் பொறுப்பாகும். அந்த வகையில் அனைத்துப் பங்குதாரர்களுடன் கலந்துரையாடியும் களப் பயணங்களை மேற்கொண்டும் மற்றும் ஆய்வுகளை நடத்தியும் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக இந்த கட்டுரை பேசுகிறது. அதற்கு முன் யாழ்ப்பாண நீர்வளம் தொடர்பாகவும் நீரேரியின் நோக்கம் தொடர்பாகவும் அதன் தடுப்பணைக் கதவுகளின் இயக்கம் தொடர்பாகவும் புரிந்து கொள்ளவேண்டியது அவசிமாகும்.

## 2.0 யாழ். நீர்வளமும் அதனைப் பாதுகாப்பதன் முக்கியத்துவமும்.

யாழ்ப்பாணம் இலங்கையில் ஆறுகளற்ற மாவட்டமாகவும் மிகப்பெரிய மற்றும் நடுத்தரக் குளங்கள் இல்லாததும் அதனை அமைக்க முடியாத தரைத்தோற்ற அமைப்பை கொண்ட மாவட்டமாகவும் காணப்படுகிறது. ஆனபோதிலும் அதிஸ்ரவசமாக மிகப்பெரிய நிலத்தடிநீர்வளத்தைதன்னகத்தே கொண்டிருக்கின்றது. தனது குடிதண்ணீர் மற்றும் விவசாயம் உட்பட அனைத்து நீர்த் தேவைகளுக்கும் நிலத்தடி நீரிலேயே தங்கியுள்ளது. இதற்கு நன்னீரை ஊடுகடத்தும் அமைப்பாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறிய குளங்கள் மற்றும் குட்டைகள் (ஊணலிஜ-வி) காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பரிபாலனத்திற்குட்பட்ட உவர்நீர்த் தடுப்பணைகள் கடல் நீரை உள்ளே வராமல் தடுக்கும் அதேவேளை நன்னீரை சேமித்து நிலத்தடி நீரை மேம்படுத்ததுவதில் மிகப்பெரிய பங்காற்றுகின்றன. அந்த வகையில் 34 உவர் நீர் தடுப்பணைகள் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் மழை காலங்களில் மழையினால் நீரானது வெள்ளமாக பெருகி கடலுடன் கலக்கும் இடங்களான அராலி, அரியாலை, தொண்டைமானாறு பிரதேசங்களில் நன்னீரை சேமிக்கவும் கடல் நீர் உட்புகாதிருக்கவும் பராஜ்கள் (யழிஷஷழிஆளவி) அமைக்கப்பட்டுள்ளன.

## 3.0 நீரேரிகளின் முக்கியத்துவமும் உருவாக்கமும்

யாழ். குடாநாட்டிற்குள் இரண்டு நீரேரிகளும் (வடமராட்சி நீரேரி, உப்பாறு நீரேரி) வெளியே ஒரு நீரேரியும் (ஆனையிறவு நீரேரி) உண்டு. இந்நீரேரிகளை சூழவுள்ள விவசாய நிலங்களில் 11,000 ஏக்கர் நிலங்கள் விவசாயம் செய்யமுடியாத தரிசு நிலங்களாகவே உள்ளன. 20,000 ஏக்கர் நிலங்களில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டாலும் விளைச்சல் மற்ற பிரதேசங்களில் பெறப்படுவதிலும்பார்க்கக் குறைவானது. மூன்றில் ஒருபங்கு விளைச்சலைக்கூட பெறமுடியாத நிலையே முன்னர் காணப்பட்டது. நீரேரிகளிலுள்ள கடல் நீரும் விவசாய நிலங்களில் அவற்றின் ஊடுருவலுமே மேற்படி நிலைமைக்கு காரணமாக அமைந்திருந்தது.

இந்தவிவசாயநிலங்களைமீட்டெடுத்துநல்லவிளைச்சலைப் பெறும்நோக்குடனும்நிலத்தடிநீரைமேம்படுத்தும்நோக்குடனும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலிருந்து இவற்றைநன்னீரேரிகளாக மாற்றும் திட்டங்கள் வகுக்கப்பட்டு அத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சில பரீட்;சார்த்த நடவடிக்கைகளில் ஏரியில் கணிசமான மாற்றமும், விவசாய நிலத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய விளைச்சலும், கால்நடைகள் நீரினை பெற்றுக்கொள்ளும் உபாயமும் அவதானிக்கப்பட்டது. இதன் பின்னர் 1954ம் ஆண்டு காலப்பகுதியில் தொண்டைமானாறு தடுப்பணையும் (Barrage) அரியாலைதடுப்பணையும்பின்னர்வழுக்கியாற்றின் ஆற்று முகத்தில் அராலி தடுப்பணையும் அமைக்கப்பட்டன.

## 4.0 நீரேரிகளின் மீள் புனர்நிர்மாணம்

தடுப்பணைகள் அமைக்கப்பட்டு அதன் உரிய நோக்கத்தை கணிசமாக எட்டிக்கொண்டுவரும் தருணத்தில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக தகுந்த முறையில் பராமரிக்கவும் செயற்படுத்தவும் முடியாமல் போனதால் கடல் நீரானது படிப்படியாக தடுப்பணைகளினூடாக மீண்டும் நீரேரிகளுக்குள் புகுந்தது. இதனால் நீரேரியும் விவசாய நிலங்களும் நிலத்தடி நீரும் உவராக மாற்றம் கண்டன.

போரின் பின்னர் மீள் புனரமைப்பின் முக்கியத்துவம் கருதி எடுக்கப்பட்ட முயற்சிகளின் பிரகாரம் ஆளும் தரப்பின் நிதி உதவியுடனும் உலக வங்கியின் நிதி உதவியுடனும் அராலி தடுப்பணையும் (2008), அரியாலை தடுப்பணையும் (2010), தொண்டைமானாறு தடுப்பபணையும் (2018) புனரமைக்கப்பட்டு மிகவும் திருப்திகரமான முறையில் பராமரிக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக, முன்னைய காலங்களில் உப்பு விளையும் நிலமாக இருந்த வல்லை பாலத்தடி போன்ற பிரதேசங்களில் உப்பு விளைச்சல் முற்றாக தடுக்கப்பட்டுள்ளதுடன் நிலத்தடி நீரில் முன்னேற்றகரமான மாற்றம் ஏற்பட்டுள்ளதை அப்பகுதி மக்கள் கூறுவதன் மூலமும் எமது ஆய்வுகூட




பரிசோதனைகளின் மூலமும் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் பல விவசாய நிலங்களில் கணிசமான அளவு விளைச்சல்; கிடைக்கப்பெறுவதையும், நீரேரி நீரினை பயன்படுத்தி சில இடங்களில் உப உணவுப் பயிர்செய்கை மேற்கொள்ளப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மேலும் நீரேரியில் கடல் மட்டத்தில் இருந்து 4 அடி வரை நீரைச் சேமிக்கக்கூடிய வாய்ப்பு உள்ள போதிலும், நீரேந்து பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நில ஆக்கிரமிப்பு காரணமாக முழுமையாக நீரை 4 அடி வரை சேமிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. மாறாக நன்னீரை முழுமையாக சேமிக்கமுடியுமாயின் அதிக காலம்; நீர் ஏரியில் நன்னீரை தேக்கி வைத்திருக்க முடியும். இதன் மூலம் தடுப்பணை உருவாக்கத்திற்கான நோக்கத்தை முழுமையாக அடைய முடியும்.

படம் 01 : யாழ்ப்பாண நீரேரிகள்

## 5.0 வடமராட்சி நீரேரியும்



## தொண்டைமானாறு தடுப்பணையும்

வடமராட்சி நீரேரியானது வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கட்டைக்காடு எனும் இடத்தில் ஆரம்பித்து தொண்டைமானாறு வரை பரந்து காணப்படுகிறது. இது கிட்டத்தட்ட 78 சசதுர கிலோ மீற்றர் நீரேந்து பரப்பளவை கொண்டதுடன் பச்சிலைப்பளை, வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி, கரவெட்டி, கோப்பாய் மற்றும் பருத்தித்துறை ஆகிய 06 பிரதேச செயலக பிரிவுகளுடாகச் செல்கிறது. இதன் ஆற்று முகத்துவாரத்தில் தொண்டைமானாறு தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது. இது 20 அடி அகலமும் 6 அடி உயரமும் கொண்ட துருப்பிடிக்காத இரும்பிலான 18 கதவுகளையும் 10 அடி அகலமும் 2 அடி உயரமும் கொண்ட 16 மரக் கதவுகளையும் கொண்டுள்ளது. கடல் நீர் உட்புகாத வண்ண அமைப்புக்களை மின்சாரம் மூலம் இயக்கக்கூடிய ஏற்பாடுகளையும் கொண்டுள்ளது.

படம் 2: தொண்டைமானாறு தடுப்பணை

## 6.0 தடுப்பணைக் கதவுகளின் இயக்கம்

### 6.1 நிலை 01

நீரேரியின் நீர் மட்டம் கடல் நீர் மட்டத்தைவிட உயர்வாக உள்ளபோதே கதவுகள் திறக்கப்பட்டு தண்ணீர் கடலுக்கு அனுப்பப்படும் . இருப்பினும் பின்வரும் கட்டங்களில் மட்டுமே தடுப்பணை கதவுகள் திறக்கப்பட்டு கடலுக்குள் அனுப்பப்படுகின்றன.

**கட்டம் 01**

காலைக்கதிர்
Kalaikkathir

# வடமராட்சி நீரேரியும் தொண்டைமானாறு

13 ம் பக்கத் தொடர்ச்சி...

ஐப்பசி மற்றும் கார்த்திகை மாதங்களில் பருவமழை பெய்யும்போது நீரேரிக்கு தண்ணீர் வருவதால் நீரேரியின் நீர்மட்டம் உயரும் நீரேரியிலுள்ள உப்பு படிமங்களையும் உவர்த்தன்மையான நீரையும் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். (Leaching out /Flashing out Procedure)

### கட்டம் 02

ஐப்பசி முதல் தைமாதம் வரை மழைவீழ்ச்சி, நீரின் உள்வருகை, மற்றும் நீரேரியின் நீர் மட்டம் என்பவற்றைக் கருத்தில்கொண்டு வெள்ளம் ஏற்படாத வண்ணம் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படும்.

### கட்டம் 03

பங்குனியிலிருந்து ஐப்பசி மாதத்திற்கும் எதிர்பாராத மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்று நீரேரியின் நீர் மட்டம் அதிகரித்து வெள்ளம் ஏற்படுவதற்கான வாய்ப்பு

உருவாகுமெனின் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படும்.

### 6.2 நிலை 02

நிலை - 01 இல் குறிப்பிட்ட தருணங்களில் மட்டுமே கதவுகள் திறக்கப்பட்டு நீரானது கடலுக்கு அனுப்பப்படும். அவை தவிர்ந்த அனைத்து காலப் பகுதியிலும் கதவுகள் முழுமையாக மூடப்பட்டே இருக்கும். அத்துடன் கடல் மட்டம் நீரேரியின் நீர் மட்டத்தைவிட உயர்வாக உள்ள சந்தர்ப்பத்திலும் கதவுகள் திறக்கப்பட மாட்டாது.

நீரேரியின்நீர்மட்டமானதுகடல்மட்டத்தைவிடக்குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் கதவுகளைத் திறக்கும் தேவைப்பாடு எச்சந்தர்ப்பத்திலும் இல்லை என்பதே உண்மை.

கதவுகள் எவ்வண்ணம் இயக்க வேண்டும் எத்தனை கதவுகள் இயக்க வேண்டும் எந்த தருணங்களில் இயக்க வேண்டும் போன்ற விடயங்களை களநிலமைகளுக்கு ஏற்றவாறும் அனைத்து பயனாளிகளுக்கும் பாதிப்பு ஏற்படாதவாறும் திணைக்கள நியதிகளின பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. எனினும், பருவகால மழையின்போது தாழமுக்கம் நிகழ்கின்ற வேளைகளில் தொண்டைமானாறு கடல் மட்டம் அசாதாரணமாக உயர்வதும் சமீப காலங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது. குறித்த நேரங்களில் நீரேரிக்கு நீர் வரத்து இருப்பினும் தடுப்பணைக் கதவுகளைத் திறந்து நீரை வெளியேற்றுவது சாத்தியமில்லை.


## 7.0 கலந்துரையாடல்களும் கூட்டங்களும்

வடமராட்சி நீரேரியினை அண்மித்த பகுதிகளில் வெள்ளம் மற்றும் வயல்கள் அழிகின்றன என்பது தொடர்பாக கருத்துக்களும் முறைப்பாடுகளும் செய்யப்பட்டதன் அடிப்படையில் பல கலந்துரையாடல்களும் கூட்டங்களும் கௌரவ ஆளுநர் தலைமையிலும் மாவட்டச் செயலர் தலைமையிலும் தொடர்புடைய திணைக்களங்களின் பிரதிநிதிகளுடனும் உரிய பங்குதாரர்களுடனும் நடைபெற்றது. அத்துடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் மேற்படி விடயம் கலந்துரையாடப்பட்டது. இயன்றளவு வெள்ளப் பாதிப்புக்களைக் குறைத்து மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் மாற்றங்களை ஏற்படுத்தவும் புதிய நடைமுறைகளைப்பின்பற்றவும்வேண்டுமென்றபரிந்துரைகள் வைக்கப்பட்டிருந்தன. அந்த வகையில் அனைத்துப் பங்குதாரர்களின் பங்குபற்றுதலுடன் களப்பயணங்களையும் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டு தீர்மானங்களை இற்றைப்படுத்தி நடைமுறைப்படுத்த திட்டம் வகுக்கப்பட்டது.

## 8.0 தீர்வுப் பொறிமுறைகளை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்

மேற்படிசவால்களைஎதிர்கொள்ளவும்பிரச்சனைகளுக்குரிய தீர்வுப் பொறிமுறைகளை உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையினை அனைத்து தரப்பினரும் உணர்ந்ததன் அடிப்படையில் அனைத்துப் பங்குதாரர்களுடன் கலந்துரையாடி அவர்களின் பரிந்துரைகளையும் சிபாரிசுகளையும் உள்வாங்கி நடைமுறைப்படுத்துவது சாலப்பொருத்தமானதென தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பின்வரும் முறையில் கலந்துரையாடல்களை நிகழ்த்துவதென்று தீர்மானிக்கப்பட்டது

நீரேந்துபிரதேசத்தில்அமைந்துள்ளவிவசாயத்திற்கும்புதிய குடியேற்றங்களுக்கும் மற்றும் பங்குதாரர்களுக்கும் ஏற்படும் பாதிப்பை இயன்றவரை குறைத்து நன்மை பயக்கக்கூடிய விதத்தில் தொண்டமனாறு தடுப்பணைக் கதவுகளின் இயக்கத்திற்கானநியமங்களிலும்நிலையியல்கட்டளைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தி அதனை இவ்வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்தக் கூடியவாறான நடவடிக்கையை




மேற்கொள்வது. மற்றும் பிரதேச மட்டம் மற்றும் கிராம மட்டத்திலும் பங்குதாரர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அவர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகள், கருத்துக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிலையியற் கட்டளையினை அனைத்து பங்குதாரர்களும் பங்குபற்றும்

படம் 03 : கலந்துரையாடல் முறை

மாவட்ட ரீதியிலான கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தி அனைவரும் அதனை ஏற்றுக்கொள்ளும் வகையில் இற்றைப்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டது

அந்த வகையில் மாவட்டச் செயலர் தலைமையில் தொண்டைமனாறு கதவுகளின் இயக்கம் தொடர்பான தொடக்கக் கூட்டம் நடைபெற்று எடுக்கப்பட்ட தீ;ர்மானங்களின் அடிப்படையில் தொடர்புபட்ட பிரதேச செயலக பிரிவுகளில் பங்குதாரர்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய தொடக்ககட்ட கூட்டமும் அதனைத் தொடர்ந்து வடமராட்சி நீரேரியுடன் தொடர்புபட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் கிராமத்தைச் சேர்ந்த அனைத்துப் பங்குதாரர்களை உள்ளடக்கிய கூட்டங்களும் அதன் பிற்பாடு வடமராட்சி நீரேரி தொடர்பாகவும் தடுப்பணைக் கதவுகளின் இயக்கம் தொடர்பானதுமான பரிந்துரைகளை வழங்கும் முகமான பிரதேச செயலக மட்ட இறுதித் தீர்மானக் கூட்டமும் நடைபெற்றன.

இறுதியாக மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் பிரதேச செயலக பரிந்துரைகளையும் சிபார்சுகளையும் உள்வாங்கி ஏனைய பங்குதாரர்கள் மற்றும் நிபுணத்துவமிக்கவர்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு தொண்டைமானாறு கதவுகளின் இயக்கம் தொடர்பான நியதிகளும் நியமங்களும் உறுதிப்படுத்தப்பட்டன.

அத்துடன் தொடர்புபட்ட திணைக்களங்களான வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், விவசாயத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம், தொடர்புபட்ட பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகள் மற்றும் தொடர்புபட்ட பிரதேச செயலகங்கள் ஆகியவற்றின் பொறுப்புக்களும் ஆற்றவேண்டிய கடமைகளும் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டன.

## 9.0 வெள்ளப் பேரிடருக்கான காரணங்கள்

வெள்ளம், வயல்களின் அழிவுகளுக்குமான காரணமாக வடமாராச்சி நீரேரியும் தொண்டைமானாறு தடுப்பணையுமென்று தொடக்கத்தில் கூறப்பட்டிருந்த போதும் பின்வரும் காரணங்களும் சுட்டிக்காட்டப்பட்டன.

- இந்த பகுதியில் நகரமயமாக்கல் மற்றும் வளர்ச்சி
- வீதிக் கட்டுமானங்கள் (TDA/RDD/PS)
- பாலங்கள் மற்றும் மதகுகளின் அளவு மற்றும் அதன் அமைவிடம்
- தற்காலிக பாதை அகற்றாமை
- காலநிலை மாற்ற பாதிப்புகள்
- நெல் வகை தேர்வு/ விதைப்புக் காலம்/ அறுவடைக் காலம்
- வடிகால்/ கால்வாய்களின் பராமரிப்பு
- ஏற்கனவே உள்ள நீர் வழிகளை தடுத்தல்

## 10.0 தொண்டைமானாறு அணைக் கதவுகளின் செயல்பாட்டுக் கையேட்டை மேம்படுத்துதல்

ஏற்கனவே செயற்பாட்டுக் கையேட்டில் கூறப்படத்திற்கு மேலதிகமாக பின்வரும் பரிந்துரைகள் வழங்கப்பட்டு தடுப்பணைக் கதவுகளின் இயக்கத்தில் பின்வரும் மேம்படுத்தல்கள் செய்யப்பட்டன.

### 10.1 நிலை 01 (நீரேரி நீர் மட்டம், கடல் நீர் மட்டம்) - கட்டம் 01

புரட்டாதி, ஐப்பசி மற்றும் கார்த்திகை மாதங்களில் பருவமழை பெய்யும் போது ஏரிக்கு தண்ணீர் வருவதால் ஏரியின் நீர்மட்டம் உயரும். மழை தொடர்பான எதிர்வுகூறல் . நீரேரியிலுள்ள நீரின் தரம் (உவர்தன்மை), கடற்கரையிலுள்ள மணற்திட்டியினை (Sand Bar) அகற்றும் சாத்தியம் ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் கதவுகள் திறக்கப்படும்,

நீரேரியில் உள்ள உப்பு படிமங்களையும் உவர்த்தன்மையான நீரையும் வெளியேற்றும்

அத்துடன் இவ்ஆரம்ப கட்டத்தில் வயல் நிலங்கள் முளைவெள்ளத்தில் அழிந்து போகக் கூடிய வாய்ப்புகளும் இருப்பதினால் வயல்நிலங்களை பாதுகாக்கும்

### 10.2 நிலை 01 ( நீரேரி நீர் மட்டம், கடல் நீர் மட்டம்) - கட்டம் 02

புரட்டாதி, ஐப்பசி முதல் தைமாதம் வரை மழைவீழ்ச்சி, நீரின் உள்வருகை, மற்றும் நீரேரியின் நீர் மட்டம் என்பவற்றை கருத்தில் கொண்டு வெள்ளம் ஏற்படாத வண்ணம் கதவுகள் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படும்.

பருவ கால முடிவில் நீரேரியின் நீர் மட்டம் சாத்தியமான உச்சஎல்லையில் பேணப்படும் (அதாவது கடல் மட்டத்திலிருந்து 4 அடி உயரத்திற்கு)

நிலையியல் கட்டளையின் பிரகாரம் பொறியியலாளர் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பராமரிப்பு ஊழியர்கள் எந்நேரமும் கடமையில் ஈடுபடும் ஒழுங்கமைப்பு மேற்கொள்ளப்பட்டு திறக்கப்படவேண்டிய உரிய நேரத்தில் திறக்கப்படும் ( சனி ,ஞாயிறு, விடுறைநாள். மற்றும் இரவு பகல் எந்நேரமும்)

கதவுகளின் இயக்கம் மற்றும் நீர் மட்டங்கள் மழைவீழ்சசியின் அளவுகள் விவாசாயிகளும் உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வகையில் பொறிமுறை உருவாக்கி; செயற்படுத்தும் முறைமையும் கையாள பரிந்துரை வழங்கப்பட்டது. நீர்ப்பாசனப் பொறியியலாளர் மேற்படி தகவல்களை பிரதேச செயலாளர்களுக்கு வழங்குவார். அவை மக்களுக்கும் விவசாயிகளுக்கும் சென்றடையும் வழிவகைகளை அந்தந்த பிரதேச செயலாளர்கள் மேற்கொள்வார்கள். (WatsApp Group).

அத்துடன் தொடர்புபட்ட திணைக்களங்களான வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், விவசாயத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம், தொடர்புபட்ட பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகள் மற்றும் தொடர்புபட்ட பிரதேச செயலகங்கள் ஆகியவற்றின் பொறுப்புக்களும் ஆற்றவேண்டிய கடமைகளும் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டன.

## 11.0 வெற்றிகரமான தொண்டைமானாறு கதவுகளின் இயக்கம்

தொண்டைமானாறு கதவுகளின் ,யக்கம் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட மீள்புதுப்பிக்கப்பட்ட கையேட்டின்அடிப்படையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை உள்வாங்கி இவ்வருடம் (2023) அணைக்கதவுகள் இயக்கப்பட்டன.

எவ்விதமான குற்றச்சாட்டுகளோ குறைகளோ எம்மை நோக்கி இவ்வருடம் எவராலும் சுட்டிக்காட்டப்படவில்லை, அத்துடன்ஊடகங்களிலும்சமூகஊடகங்களிலும்எதிர்மறையான எந்தவித விமர்ச்சனங்களும் முன்வைக்கப்படவில்லை. பங்குதாரர்கள்மத்தியில்நல்லதொருவிழிப்புணர்வுஏற்பட்டதுடன் காலத்திற்கும் சூழ்நிலைக்குமேற்ற வகையில் கையேட்டில் மாற்றங்களை ஏற்படுத்தியமை வெற்றிகரமான தடுப்பணைக் கதவுகளின் இயக்கத்திற்கு வழியமைத்திருக்கிறது.

## 12.0 முடிவுரை

வடமராட்சி நீரேரியைச் சூழவுள்ள பகுதிகளில் ஏற்படும் வெள்ளப் பேரிடரைத் தடுக்கும்/ குறைக்கும் முகமாக அனைத்துப் பங்குதாரர்கள் மற்றும் அறிவுஜீவிகளுடனான கலந்துரையாடலின் பிரகாரம் எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆக்கபூர்வமான முடிவுக்கு வந்திருக்கிறது. அந்தவகையில் தொண்டைமானாறு தடுப்பணைக் கதவுகளின் இயக்கம் தொடர்பான கையேடு மேம்படுத்தப்பட்டிருப்பதுடன் இதனுடன் இணைந்த அனைத்து திணைக்களங்களின் பொறுப்புக்களும் கடமைகளும் மீண்டும் வலியுறுத்தப்பட்டிருப்பதுடன் மக்கள் மத்தியிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அத்துடன் விவசாயிகள் தடுப்பணைக் கதவுகளின் இயக்கம் மற்றும் நீரேரியின் நீர்மட்டம் கடல் மட்டம் தொடர்பான விடயங்களை உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையிலும் ஒரு முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. இவை நல்லதோர் சுமுகமான இயக்கத்திற்கு வழியமைத்துக் கொடுத்திருக்கிறது. எமது நீர்வளங்களைப் பேணவும் அவற்றின் உரிய நோக்கத்தை அடையவும் இச்செயற்பாடு வித்திட்டிருக்கிறது.

**(கட்டுரையாளர் வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர்)**




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.03.2024இல் வெளியிடப்பெற்றது